உ
சிவமயம்

# ஞானசம்பந்தம்

தருமை ஆதீனத் திங்கள் இதழ்

மலர் 49 [ பிரமோதூத ஆண்டு புரட்டாசித் திங்கள் 10-10-90 [ இதழ் 11

தருமை ஆதீனம் மேலைக் குருமூர்த்த ஆலயங்களின்

மகாகும்பாபிஷேகம்

8—11—1990 வியாழன்

24 2 19

2 ஆவது குருமூர்த்திகள் ஸ்ரீலஸ்ரீ ஆனந்தபரவச தேசிக சுவாமிகள்

19 ஆவது குருமூர்த்திகள் ஸ்ரீலஸ்ரீ மாணிக்கவாசக தேசிக சுவாமிகள்

24 ஆவது குருமூர்த்திகள் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக சுவாமிகள்

குருமூர்த்த ஆலயங்கள்

தருமையாதீனக் குருமுதல்வர்

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ

குருபாதம்

## ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வாக்கு

என்றும் பிரியா
விருளருளா னீங்கவின்பாய்த்
துன்றுசிவ போகமெனச்
சொல்லாமல் — உன்றன்
நலம்போக மென்றுரைத்தாய்
நாமறிவோம் நீயும்
மலம்போக முத்தியென்ப வன்.

— முத்திநிச்சயம் 15

ஆசிரியர் :-

வித்துவான்
**இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள்**

துணையாசிரியர் :-

மகாவித்துவான்
**சி. அருணவடிவேல் முதலியார்**

உ

குருபாதம்

# ஞானசம்பந்தம்

## தருமை ஆதீனத் திங்கள் இதழ்

மலர் 49 | 10-9-90 | இதழ் 10

## உட்பொருள்


| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1 | தருமை ஆதீனம் ஸ்ரீ சித்திவிநாயகர் திருக்கோயில் மகாகும்பாபிஷேக பத்திரிகை | ... 505 |
| 2 | தருமை ஸ்ரீலஸ்ரீகுருமகா சந்நிதானம் அவர்கள் வழங்கிய ஆசியுரை | ... 510 |
| 3 | தருமை ஆதீன குருபரம்பரை தோத்திரப் பாமாலை | ... 519 |
| 4 | போதமும் சித்தியும் | ... 521 |
| 5 | கடிதம் | 526, 532, 356 |
| 6 | உயர்ந்தது சைவமா அசைவமா ஆய்வில் புது முடிவு | ... 527 |
| 7 | மணிக்கடலில் முகந்த சில முத்துக்கள் | ... 529 |
| 8 | சண்டேஸ்வர பிரஸாதம் | ... 533 |
| 9 | " காரைக்கால் அம்மையார் தொடங்கி வைத்த உத்தி " | ... 537 |
| 10 | அருட்செல்வம் | ... 541 |
| 11 | ஸ்ரீ லிங்கோத்பவ மூர்த்தி | ... 545 |
| 12 | செய்திகள் | ... 546 |
| 13 | எதிர்காலம் | ... 551 |

உ
குருபாதம்

# ஞானசம்பந்தம்

மலர் 49 ★ இதழ் 11

தருமை ஆதீனத் திங்கள் இதழ்

பிரமோதூத - புரட்டாசி - 10—10—1990

பொன்தயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினுய்! கூடல்ஆல வாயிலாய்!
நின்தயங்கி யாடலே நினைப்பதே நியமமே.

— திருஞானசம்பந்தர்,

திருக்கயிலாயபரம்பரைத் தருமை ஆதீனம் மேலைவீதியிலுள்ள

## அருள்மிகு சித்திவிநாயகர் திருக்கோயில்

ஆனந்தபரவசர் பூங்காவிலுள்ள
தருமை ஆதீனக் குருமகாசந்நிதானங்களில்

2 ஆவது ஸ்ரீலஸ்ரீ ஆனந்தபரவச தேசிக சுவாமிகள்
19 ஆவது ஸ்ரீலஸ்ரீ மாணிக்கவாசக தேசிக சுவாமிகள்
24 ஆவது ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக சுவாமிகள்
25 ஆவது ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக சுவாமிகள்

ஆகிய நான்கு குருமூர்த்த ஆலயங்களின்

## ஜீரணோத்தாரண அஷ்டபந்தன
# மகாகும்பாபிஷேக பத்திரிகை

விநாயகர் துதி

உள்ளமெனும் கூடத்தில் ஊக்கமெனும்
தறிநிறுவி உறுதியாகத்
தள்ளரிய அன்பென்னும் தொடர்பூட்டி
இடைப்படுத்தித் தறுகட்பாசக்

கள்ளவினைப் பசுபோதக் கவளமிடக்
களித்துண்டு கருணையென்னும்
வெள்ளமதம் பொழிசித்தி வேழத்தை
நினைந்துவரு வினைகள் தீர்ப்பாம்.

— பரஞ்சோதிமுனிவர்.

### குருஞானசம்பந்தர் துதி

சீரணியும் நுதலின்விழி மழுமான் நாகம்
திருந்தும்எரி பொருந்துவிடம் தெரிந்திடாமல்
தாரணிஅன் பரைஆள அவர்போல் வந்த
சைவசிகா மணிஎவர்க்கும் தலைவன் எங்கோன்
காரணியும் நெடிய பொழில் கமலை வேந்தன்
கருணைமழை பொழியுமிரு கடைக்க ணுளன்
பாரணியும் ஞானசம் பந்தன் எந்தை
பரமன்இரு சரணமலர் பரவி வாழ்வாம்.

— ஸ்ரீ சம்பந்தசரணலயர்.

### ஆனந்தபரவசர் துதி

நெறியாரும் தருமைநகர் தன்னிலருள் மேவி
நேயமுறு ஞானசம் பந்தனடி நேர்ந்தே
அறியாமை அறிவகற்றி அறிவதனி னுள்ளே
அறிவுதனை அருளினால் அறியாதே அறிந்து
குறியாதே குறித்தந்தக் கரணங்களோடும் கூடாதே
வாடாதே குழைந்து முத்திதன்னில்
பிறியாத சிவத்தோடு பேதமற நின்ற
பெரியவனும் ஆனந்த பரவசனைப்பணிவாம்.

### கயிலைக் குருமணி துதி

முப்பொருள்உண்மைநாளும் மொழிந்தருள்மெய்கண்டான்தன்
திப்பிய சந்தானத்துத் திருநகர்த் தருமை மேவி
இப்புவித் தொடர்பின் நீக்கி என்னையும் அடிமைகொண்ட
சுப்பிரமணிய ஞான சம்பந்தன் துணைத்தாள் போற்றி.

அகர உகர மகரச் சேர்க்கையே ஓம் என்னும் பிரணவமாகும். அவ்வோங்காரத்துள் ஒளிக்கும் உள்ளொளியாயும், ஓங்கார உருவாயும் இருப்பவன் சிவ பெருமான். அவன்றன் மூத்தபிள்ளையாகியவிநாயகரும் ஓங்கார உருவாய் இருப்பவர். இவ்விநாயகர் திருப் பெயர்கள் பலவற்றுள்ளும் சித்திவிநாயகர் என்பதே

சகலசித்திகளையும் வழங்குவதுடன் ஞானசித்தியையும் அருள்வது. எனவேதான் தருமையும் கமலையும் விரிதமிழ்க் கூடலும் திருநகராக அரசுவீற்றிருந்தருளும் ஸ்ரீ குருஞானசம்பந்தர் திருவருள் திருவுருப் பெற்ற மதுரையில் சித்திவிநாயகர் அருள் பெற்றதாலும், குருவருள் பெற்றதிருவாரூர்சித்தீச்சரத்தில் குருபதேசச் சித்திபெற்றதாலும் அத்திருப்பெயர் தாங்கிய சித்தி விநாயகரைத் தருமையிலும் எழுந்தருளச் செய்துள்ளார். அவரேமேலைவீதியில்நிருதிமூலையில்திருக்கோயில் கொண்டுஎழுந்தருளிஅன்பர்களின்சித்தம் குடிகொண்டு சித்தியருளி வருகின்றார்.

உலகெலாமாகி வேறாய், உடனுமாய், ஒளியாய், ஓங்கி நிற்கும் முழுமுதற் பரம்பொருளாகிய சிவ பெருமான், தன்னைநோக்குமிடத்துச் சிவமாய்,தன்னிற் பிரிவிலா ஆற்றலை நோக்குமிடத்து அம்மையாய், இவ் விரண்டன் உருவாய் நோக்குமிடத்துக் குருவாய் எழுந்தருளி அருள் வழங்குகின்றார். எனவேதான் ' குருவே சிவமெனக்கூறினன் நந்தி ' என்றார் திருமூலர். தீராத வல்வினை தீர்த்த குருவின் திருவுருக்கொண்டு ஆராத இன்பச் சுகாதீதம் நல்கினள் அம்பிகையே ' என்றார் புவனம்பிகைக்கலைஞானதீப ஆசிரியர்.

வேறாய் என்பது சிவமாய் நிற்கும் நிலையையும், உலகெலாமாகி என்பதுஅம்பிகையாய் அருள்வழங்கும் நிலையையும், உடனாய்என்பது குருவுருவாய் எழுந்தருளி உண்மை ஞானம் அருளும்நிலையையும் உணர்த்துகிறது. எனவேதான் இறைவன் ஸ்ரீகண்ட பரமசிவமாய், நம் குருமரபிற்கெல்லாம் முதற்குருநாதனாகிய நந்தியெம் பெருமானுக்கு உபதேசிக்க,அந்நந்திமரபில்மெய்கண்ட சந்தான உபதேச வழியில் வந்த திருவாரூர் கமலை ஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக மூர்த்திகளிடம் அருளுபதேசம் பெற்ற ஸ்ரீ குருஞானசம்பந்தர் கி. பி. 16 ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் தம் ஞானாசாரியர் ஆணைப்படி வில்வாரண்யம் எனப்பெயர் பெற்றதும்,

எமதருமன் பூசித்துப் பேறு பெற்றதுமாகிய இத் தருமபுரத்தில் சைவ சித்தாந்த ஞானபீடமாகிய குரு பீடத்தை ஸ்தாபித்தருளினூர்.

ஸ்ரீ குருஞானசம்பந்தர் ஜீவசமாதிகூடத் திருவுளங் கொண்டு அடுத்தபடியாக ஞானபீடத்தை அலங்கரிக்கத் தம் சீடர்களில் ஒருவரான ஸ்ரீ ஆனந்தபரவசருக்கு ஞானோபதேசம் செய்தருளினூர். அதிதீவிரபக்குவ முடைய ஆனந்தபரவசர் குருநாதரின் விமான கலசத் தைத் தரிசித்தவாறே முத்திநிலை கூடினூர். ஸ்ரீ குருஞான சம்பந்தர் சீடர்களின் வேண்டுகோட்படி மீண்டும் ஜீவசமாதியினின்றும் வெளிப்பட்டுத் தம் சீடர்களில் ஸ்ரீ சச்சிதானந்தருக்கு ஞானோபதேசம் செய்யும் போது "ஆனந்தபரவசனைக் கண்டும் கண்டும் அந்தந்தோர் பரகதியை அறிந்தீரில்லை" என்று ஆனந்தபரவசரைப் பாராட்டு முகத்தால் ஞானநிலை கைகூடச் செய்தார்.

ஞானானுபூதிச் செல்வராகிய ஸ்ரீ ஆனந்தபரவசர் குருமூர்த்த ஆலயம் அவர்தம் பெயரால் இலங்கும் ஆனந்தபரவசர் பூங்காவில் அருள் நிலையமாகத் திகழ் கிறது. இக்குருமூர்த்தத்திற்கு நேரிய பாதை அமைத்த வர்கள் 19 ஆவது குருமகாசந்நிதானமாவார்கள்.

அருள்நிலை விளக்கம் கண்ட இரண்டாவது ஸ்ரீ ஆனந்தபரவசமூர்த்தி, பொருள் நிலை விளக்கம் கண்ட 19 ஆவது ஸ்ரீ மாணிக்கவாசக தேசிக மூர்த்தி, தருமை நகர் நிலை விளக்கங் கண்ட 24 ஆவது சண்முக தேசிக மூர்த்தி ஆகிய மும்மூர்த்திகட்கும் 25 ஆவது கயிலைக்குருமணியவர்கள் குருமூர்த்த ஆலயம்எடுத்துத் திருப்பணி பூர்த்தி செய்து 8—6—1946ல் குடமுழுக்குச் செய்தருளினூர்கள்.

அருள்நிலை பொருள்நிலை ஆகிய இருநிலையிலும் பொற்காலம்கண்டு, கயிலை கண்டு கனகாபிஷேகம் கொண்டு காசியம்பதியில் முத்திப் பேறெய்திய ஸ்ரீ கயிலைக் குருமணிகளின் குருமூர்த்தம் மேற்படி குருமூர்த்த ஆலயங்களின் வடபால் காசியில் முத்திப் பேறெய்தியதன் நினைவாக காசி விசுவேசுவரர் ஆலய

விமான அமைப்பில் 26 ஆவது குருமூர்த்திகளால் திருப்பணிசெய்யப்பெற்று 29—10—1972ல் குடமுழுக்க காட்டப்பெற்று நித்தியநைமித்திகப் பூஜைகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

தருமை ஆதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம்

**ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்**

திருவுளப்பாங்கின்வண்ணம் இவ்வைந்து கோயில்களையும் பழுதுநீக்கிப் புதுப்பித்து வண்ணந் தீட்டியும், ஸ்ரீ ஆனந்தபரவசர் சந்நிதியில் சிமெண்ட் ஓட்டுக் கொட்டகையும், ஸ்ரீ கயிலைக்குருமணி சந்நிதியில் லோட்டஸ் ஓட்டுக் கொட்டகையும் அமைத்தும், திருப்பணிகள் செய்யப்பெற்று நாளது பிரமோதூத வருஷம் ஐப்பசி மாதம் 22ஆம் நாள் (8—11—1990) குருவாரம் ஆதிகுருமூர்த்திகளின் குருமூர்த்திகளாகிய ஸ்ரீ கமலை ஞானப்பிரகாச தேசிக மூர்த்திகளின் குருபூசைத் திருநாளாகிய ஐப்பசிச் சஷ்டி புனிதநாளில் புனர்பூச நக்ஷத்திரம் தனுர்லக்னத்தில் காலை மணி 9—00க்குமேல் 11—00 க்குள் அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் பின் பக்கம் நிகழ்ச்சி நிரலில் காணும் வண்ணம் சிறப்பாக நடைபெறும்.

சீடர்களும், பக்தர்களும் வந்து தரிசித்து சித்தி விநாயகர் திருவருளையும், குருமூர்த்திகளின் குருவருளையும் பெற்று உய்வார்களாக.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின்
உத்தரவுப்படி

தருமை ஆதீனம்,<br>31—10—1990. } **வித்துவான் சுவாமிநாதத் தம்பிரான்.**

---

**குறிப்பு :-** 6—11—90 முதல் 8—11—90 முடிய மூன்று நாட்களும் குரு, லிங்க, சங்கமம்பற்றிய கருத்தரங்கமும், ஆதீன வேதசிவாகம பாடசாலை ஆசிரியர், மாணவர்களால் வேத சிவாகம பாராயணமும், ஆதீனத்தேவாரப்பாடசாலை ஆசிரியர், மாணவர்கள் மற்றும் ஆதீன ஓதுவாமூர்த்திகளால் தேவார பாராயணமும் சிறப்பாக நடைபெறும்.

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம்

26 ஆவது குருமகாசந்நிதானம்

**ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்**

**ஸ்ரீ குருஞானசம்பந்தர் பணிமன்றச் சார்பில்**

திருக்கயிலாய பரம்பரைத்
திருவாவடுதுறை ஆதீனத்துக்குச் சொந்தமான

**திருவாவடுதுறை ஸ்ரீ கோமுத்தீசுவரர் ஆலயத்தில்**
**நடைபெற்ற**

**திருமுறை வேள்வியில் வழங்கியருளிய**

# ஆசியுரை

**13—9—1990**

" பொய்யாத வேதியர் சாந்தை மெய்ப்புகழாளர் ஆயிரம்பூசுரர்
மெய்யே திருப்பணிசெய் சீர்மிகு காவிரிக்கரை மேய
ஐயா திருவாவடுதுறை அமுதே என்றுன்னை அழைத்தக்கால்
மையார் தடங்கண் மடந்தைக்கு ஒன்றருளா தொழிவதும்
மாதிமையே "

— சேந்தனார்

**திருஆவடுதுறைச் சிறப்பு :**

திருஆவடுதுறை, உமையம்மை சிவபெருமானைப் பசு வடிவத்துடன் பூசித்து அப்பசுவடிவம் நீங்கி அருள்பெற்றதலம். ஞானசித்தி பெற்ற முனிவர்களும், சித்தர்களும் வாழ்ந்து வளம் பெருக்கியதலம். இதனால் நவகோடி சித்தர்புரம் என்ற பெருமை இதற்கு உண்டு. இத்தலத்தில் 1500 ஆண்டுகட்கு முன்னர்த் நவயோக நெறி நின்று சிவஞானநெறி விளக்கிய திருமூலர் மூவாயிரம் திருமந்திரத்தால் முப்பொருள் உண்மையை முதன்மை பெற விளக்கியுள்ளார். 1300 ஆண்டுகட்கு முன்னர் சமயாசாரியர்களில் திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும், 1200 ஆண்டுகட்கு முன்னர் சுந்தரரும் ஸ்ரீ ஒப்பிலாமுலையம்மை உடனுகிய ஸ்ரீ மாசிலாமணி ஈசரை உளமுருகிப்பாடிச் சைவத் திறம் உரைத்துப் போற்றினர். 1000 ஆண்டிற்கு முன்னர் திருமாளிகைத்தேவர் திருவிசைப்பா புனைந்து சிவநெறி விளக் கினர். 500 ஆண்டிற்கு முன்னர் திருக்கயிலாய பரம்பரைத்

திருநந்திமரபில் மெய்கண்டசந்தானத்தில் சித்தர் சிவப் பிரகாசரின் பேரருளால் அவரிடம் சிவஞானோபதேசம் பெற்ற ஸ்ரீ நமச்சிவாயமூர்த்திகள் ஆதீனத் திருமடம் கண்டு வழிவழி உபதேசவாயிலாகச் சிவம்பெருக்கினர்கள். எனவே திருமூலர் காலம் முதலாகவே ஞானபூமியாக விளங்கிவருவது திருவாவடு துறை. இச்சிவஞான ராஜதானியில் 500 ஆண்டுகளாகச் சிவஞானப் பயிர் வளர்க்கும் ஞானப்பண்ணையாக இயங்கி வருவது ஸ்ரீ நமச்சிவாயமூர்த்திகளின் ஞானகுரு பீடமாகிய திருவாவடுதுறை ஆதீனம். இவ்வாதீனத்தில் இப்போது இருபத்துமூன்றுவது குருமூர்த்திகளாக வீற்றிருப்பவர்கள் ஸ்ரீலஸ்ரீ சிவப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகளாவார்கள். ஸ்ரீ சித்தர் சிவப்பிரகாசர் திருப்பெயர் தரித்த இவர்களும் அச் சித்தரைப்போலவே திகழ்ந்து வருவது பெயர்ப்பொருத்தப் பெருமையைப் பிறங்கச்செய்கிறது.

## திருக்கோயில் சிறப்பு :

இதுகாவிரித் தென்கரைத்தலங்கள் 127ல் 36ஆவது தலமாக விளங்குவது. முதலாம் பராந்தக சோழன் கி. பி. 907–948 வரை ஆட்சி புரிந்தவன். இவன் ஆட்சியில் கற்றளிப்பிச்சன் என்பவரால் இக்கோயில் திருப்பணி செய்யப்பெற்று கி.பி.945ல் குடமுழுக்குச் செய்யப் பெற்றது என்பது கல்வெட்டுக் கூற்றாகும். கற்றளிப்பிச்சன் திருவுருவம் சுவாமி கருவறை விமானத்தில் தட்சிணமூர்த்திக்குக் கீழ்புறம் கூப்பிய கரத்துடன் சிலாவடிவில்உள்ளது. திரைமூர் நாட்டுப் பிரமதேயம்சாத்தனூர் திருவாவடுதுறை கற்றளி எடுத்தபித்தன் என்பது கல்வெட்டு. திருமூலரால் சாத்தனூர் பெருமை பெற்றது. அதனல் தான் சாத்தனூர்திருவாவடுதுறைஎன்றுவழங்கியுள்ளது.சாத்தனூரைச் சாந்தை என்று சேந்தனர் இவ்வூர்த் திருவிசைப்பாவில் குறிப் பிட்டுள்ளார். இதனலும் சாத்தனூரை அடுத்துள்ள திருவா வடுதுறை என்பது தெளிவாகும். ஆனல் சாந்தையூர் என்றும் திருவிசைப்பாவில் வருவதால் சாந்தையூர் என்பது இவ்வூரின் பெயர் என்றும், திருஆவடுதுறை என்பது கோயிலின் பெயர் என்றும் ஒருசாரார் கூறுகின்றனர்.

## செம்பொன் தியாகர் :

அம்மை பசுவடிவம் நீங்கியதும் பெருமான் அம்மையை அணைத்தெடுத்தார். அதனல் அணைத்தெழுந்த நாயகர் என்ற பெயருடன் அத்திருவுருவம் காட்சி தருகிறது. அவரே உற்சவத் தில் தீர்த்தம் கொடுத்தருள்கிறர். முசுகுந்த சக்கரவர்த்திக்கு இங்கு திருவாரூர் தியாகேசராகக் காட்சி கொடுத்தருளினர்.

இதனல் இங்குள்ள சோமாஸ்கந்தர் செம்பொன்தியாகர் எனப் போற்றப் பெறுகிருர். இது செம்பொன் தியாகர் சந்நிதி என்றே வழங்கப்படுகிறது. வீரசிங்காதனமும், சுந்தரநடனமும் இங்குள்ள சிறப்பு. தேரில் இச்செம்பொன் தியாகரே எழுந்தருள்கிருர். இதனைச் சுந்தரர், "சிறைவண்டார் பொழில்சூழ் திருவாரூர்ச் செம்பொன்னே திருவாவடுதுறையுள் அறவனே" என்று போற்றுவதாலும் அறியலாம்.

## தலச்சிறப்பு :

இறைவன் திருப்பெயர் மாசிலாமணிஈசர் என்பதை "வான நாடனே வழித்துணை மருந்தே மாசிலாமணியே" என்ற பாடலாலும், அம்மையின் பெயர் ஒப்பிலாமுலையம்மை என்பதை "ஒப்பிலா முலையாள் ஒரு பாகர்" என்ற பாடலாலும் சுந்தரர் இவ்வூர்த் தக்கேசிப்பண்ணில் குறிப்பிட்டுள்ளமை உணர்ந்து மகிழத்தக்கது. தலவிருட்சம் – படர்அரசு, தீர்த்தம் – கோமுத்தி தீர்த்தம். சபை–போதி அம்பலம். தேவர்முனிவர்களின்வேண்டு கோளுக்கிணங்க மாசிலாமணிஈசர் இங்கு அரசநிழலில் ஆடினர் என்பதுபுராணம். முசுகுந்தனுக்கு மகப்பேறளித்ததலம் என்பர், கோமுத்திபுரம், கோகழி என்பது அம்மை பசுவடிவம் நீங்கிய தால் வந்த பெயர், நவகோடி சித்தபுரம் என்பது, சித்தர்கள் பலர் வாழ்ந்து வருவதால் பெற்ற பெயராகும்.

## இசைப்பாச் சிறப்பு :

மனம், வாக்கு, காயம் மூன்றில் மனம் இயற்றமிழ், வாக்கு, இசைத்தமிழ், காயம் நாடகத்தமிழ். இவற்றுள் இசைத்தமிழே உயிரினங்களை மகிழ்வித்து ஒன்றுபடச் செய்வதுடன், மனிதனை இறைவனிடமும் இசைவிப்பது. இறைவனும் இசைப்பயனுய் இசைவாணர்க்கருள் புரிகிருன். எனவேதான் நம்சமயா சாரியர்கள் இசைப்பாடல்களால் இறைவனைப் போற்றித் துதித்தனர். அதனுலேயே தேவார மூவர்கட்கு மற்றையவர்க் கில்லாத ஏற்றம் சைவத்தில் ஏற்பட்டுள்ளது. அவ்வழியிலேயே ஒன்பதாந் திருமுறை ஆசிரியர் ஒன்பதின்மரும் இசைப்பாடல் மூலமாகவே இறைவன் பெருமையயும், தத்துவ உண்மை களையும் பாடிப்பரவியுள்ளனர்.

## திருஇசைப்பா ஆசிரியர்கள் :

திருமாளிகைத்தேவர், சேந்தனர், கருவூர்த்தேவர், பூந் துருத்தி நம்பிகாடநம்பி, கண்டராதித்தர், வேணுட்டடிகள், திருவாலியமுதர், புருடோத்தமர், சேதிராயர் ஆகிய ஒன்பதின் மரும் திருவிசைப்பா பாடிய ஆசிரியர்களாவர்.

போகசித்தருடைய சீடர்களில் திருமாளிகைத்தேவரும் ஒருவர். சைவவேளாளர்குலத்தினர், சைவமன்னர்களின் தீட்சா குருவாக விளங்கியவர். இவர் முன்னோர் வாழ்ந்த இடம் மடம், மாளிகை எனப் பெற்றதால் இவர் திருமாளிகைத்தேவர் எனப் பட்டார். பேரருளாளர், பெருஞ்சித்தர். போகர்ஆணைப்படிதிருவா வடுதுறையில் தங்கினர். தில்லைத்தலம் தரிசித்து திருவிசைப்பாப் பதிகம் நான்கு பாடியுள்ளார். திருவாவடுதுறை ஆதீனத் திருமடத்தில் இவர்தம் கோயில் உள்ளது. நான்கு திருக்கரங் களுடன் இவர் திருவுருவம் அக்கோயிலில் பூசிக்கப்படுகிறது.

## நீறணிபவளக்குன்றம் :

இராசராசன் பல ஊர்களிலிருந்தும் 400 தளிச்சேரிப் பெண் களைத் தஞ்சை இராசராசேச்சரக் கோயிலின் நான்கு திசை களிலும் 400 வீடுகள் கட்டிக் கொடுத்துக் குடி ஏற்றினன். அவர்கள் இறைபணிக்கே தம்மை ஆளாக்கிக் கொண்டவர்கள், அவர்களைத் தேவதாசியர் என்றும் அழைப்பர், அக்கால் வழியே காலப்போக்கில் வேசியராயினர் எனத் தோன்றுகிறது. தளிச்சேரிப் பெண்கள் சிவபக்திமிக்க தவச்சீலர்கள், அவர் களில் சிலர் பெயர் திருவிசைப்பாக்களில் இடம் பெற்றுள்ளன. அவற்றுள் ஒன்று " நீறணிபவளக்குன்றம் " என்பது இது ஒரு திருவிசைப்பாவின் தொடக்கமாயுள்ளது.

## காட்டும் உதவியுடன் காணும் உதவியும் செய்கிறார் :

மேலும் இவர் இறைவன் உடனயிருந்து உதவுவதை முதல் பதிகமாகிய " ஒளிவளர் விளக்கே " என்ற பதிகத்தின் முதல் பாடலின் இறுதியில் " விளம்பு மாவிளம்பே " என்கிறார். இதில் நான் பேசவேண்டுமானல் நீ உடனிருந்து உணர்த்தினல் தான் பேசுவேன் என்பதை உணர்த்துகிறார், இதேபோல், "பணியுமா பணியே" "கருதுமாகருதே" "உரைக்குமாறுரையே" "நுகரு மாநுகரே" "விரும்புமாவிரும்பே" "நினையுமாநினையே" என்ற தொடர்களால் இறைவன் உடனயிருந்து உதவும் நலன்களை விளக்கியருள்கின்றார். இவர் திருவாவடுதுறை பற்றித் திரு விசைப்பா பாடவில்லை.

## சேந்தனர் :

திருவெண்காட்டிற்கு அருகில் உள்ள நாங்கூரில் தோன்றி யவர். இவர் பட்டினத்தடிகளின் கணக்கர் என்பர். சோழ மன்னனல் சிறைவைக்கப்பட்டு, பட்டினத்தடிகளால் சிறை மீட்கப்பட்டவர். சிதம்பரத்தில்விறகுவெட்டி வந்துவாழ்ந்தவர்,

நாளும் ஒருசிவனடியாருக்கு உணவருத்தும் நியமம் பூண்டவர். ஒருநாள் நடராசரே வர அவருக்குக் களியமுதூட்டினர். அதுவே திருவாதிரைக் களியின் மகத்துவம், திருவாதிரைத் திருவிழாவில் நடராசப் பெருமான் எழுந்தருளிய தேர் ஓடாது நிற்க. இவர் திருப்பல்லாண்டு பாடி, தேரை ஓடச் செய்தார்.

### பொய்யாத வேதியர் :

இவர், திருவாவடுதுறை, திருவீழிமிழலை, திருவிடைக்கழி ஆகிய மூத்தலங்களிலும் ஒவ்வொரு திருவிசைப்பாப் பதிகம் பாடியுள்ளார். அத்துடன் தில்லையில் பல்லாண்டும் பாடியுள்ளார். பொய்யாதவேதியர், சாந்தைமெய்ப்புகழாளர், ஆயிரம் பூசுரர், மெய்யே திருப்பணிசெய், என்ற பாடலில் பொய் சொல்லா அந்தணர் பூசிப்பதே பூவுலகிற்கு நன்மை தரும் என்பதும். தில்லைமூவாயிரவர்போல் இங்கு ஆயிரவர் அந்தணர் பூசித்தனர் என்பதும் புரிகின்றது. ஞானசம்பந்தர் கூற்றையே இவரும் இங்கு எடுத்தோதியுள்ளமையும் ஒப்புநோக்கி மகிழலாம். திருவீழிமிழலை தேவாரம் "மைம்மருபூங்குழல்" என்ற பாடலில் "பொய்ம்மொழியா மறையோர்கள் எத்த புகலி நிலாவிய புண்ணியனே" என்பதும் அதே பாடலில் "மெய்ம்மொழி நான்மறையோர் மிழலை "விண்ணிழிகோயில் விரும்பியதே" என்பதும் ஞானசம்பந்தரின் ஞானத்தமிழ். இவ்விரு பெரியாரின் எண்ண ஒப்புமையை எண்ணி உயர்வோம்.

### பல்லாண்டு :

இவர் பாடியுள்ள திருப்பல்லாண்டு பதிகத்துள், "மன்னுக தில்லை வளர்க நம்பக்தர்கள் வஞ்சகர் போய் அகல" என்றும் மற்ருேர் பாடலில் இதே கருத்தை வேறுவிதமாக "மிண்டு மனத்தவர்போ மின்கள், மெய்யடியார்கள் விரைந்து வம்மின்" என்றும் அருளியதோடு, கொண்டும் கொடுத்தும் குடி குடி ஈசற்கு ஆட்செய்மின் என்றும் கூறுகின்ருர். "தாதையைத் தாளற வீசிய சண்டியின் பாதகத்துக்குப் பரிசு வைத்தான் பரமன்" என்று பாடுகின்ருர். வாழ்வின் முதல்வனுகிய இறைத் தொண்டே மூலமானது. அதற்குத் தந்தையே ஊறுசெய்தாலும் அதுபாதகம்; அது அறமும்ஆகாது. அதனுல்தான் தாதையைத் தாளற வீசிப் பரிசு பெற்ருர் சண்டீசர்.

### பண்கள் ஆறு :

தேவார மூவர் போல் இசைப்பா ஆசிரியர்களும் ஒவ்வொரு தலத்திற்கும் சென்று பாடியுள்ளனர், அங்ஙனம் இசைப்பா

பெற்ற தலங்கள் 14, இவற்றுள் சிதம்பரம், பூவணம், இடைமருதூர், ஆரூர் மிழலை, துறைசை, ஆகிய ஆறு தலங்கள் தேவாரமும் பெற்ற தலங்கள். கங்கைகொண்டசோழபுரம், திருக்களந்தை ஆதித்தேச்சரம், திருக்கீழ்க்கோட்டூர் மணியம்பலம்,திருமுகத்தலை,திரைலோக்கியசுந்தரம்,திருச்சாட்டியக்குடி, தஞ்சைராசராசேச்சரம், திருவிடைக்கழி ஆகிய இவ்வெட்டுத் தலங்களும் திருவிசைப்பா மட்டும் பெற்ற தலங்கள், திருப்பல்லாண்டு மட்டும் பெற்றது சிதம்பரம் மட்டுமே. சேந்தனார் தான் திருவிடைக்கழி முருகன் மீது "மாலுலாம் மளந்தந்து" என்ற திருவிசைப்பாப் பதிகம் பாடியுள்ளார். இதிலிருந்துதான் 11ஆம் திருமுறையில் முருகன், கணபதி, அடியவர்கள் மீது பாடும் பழக்கம் ஏற்பட்டுள்ளது. பல்லாண்டையும் சேர்த்து இதில் 29 பதிகங்கள் உள்ளன. 301 பாடல்கள் உள்ளன. இப்பதிகங்கள் இந்தளம், காந்தாரம், சாளரபாணி, நட்டராகம், பஞ்சமம், புறநீர்மை ஆகிய 6 பண்களில் பாடப்பெற்றுள்ளன. இவற்றுள் 21 பதிகங்களைப் பஞ்சமப்பண்களிலேயே பாடியுள்ளனர். தேவாரத்தில் காணப்பெருத புதுப்பண் சாளரபாணி என்பது அது இத்திருமுறையில் இடம்பெற்றுள்ளது. பூந்துருத்தி நம்பிகாட நம்பி அருளிய இருபதிகத்தில், சிதம்பரத்தில் பாடிய 'முத்துவயிர மணி" எனத்தொடங்கும் பதிகமேசாளரபாணியில் பாடப்பட்டதாகும்.

களப்பாள் :

திருத்துறைப்பூண்டிக்கு அருகில் உள்ள களப்பாள்தான் களந்தை ஆதித்தேச்சரம் எனப்பாடல் பெற்றுள்ளது. இது கூற்றுவநாயனரின் அவதாரத்தலம். "கோதை நெடுவேல் களப்பாளனகிய கூற்றுவனே" என்பது திருத்தொண்டர் திருவந்தாதியாகும். அந்தணர் அழலோம்பும் திறத்தைக்கருவூர்த் தேவர் போற்றியுள்ளார். "பழையராந்தொண்டர்க்கு எளியரே மிண்டர்க்கு அரியரே" என்பதால் இறைவன் எளிமையையும் அருமையையும் போற்றியுள்ளார்.

படிக்காசளித்த பரிசு :

சேந்தனார் திருவீழிமிழலைப் பதிகத்தில் "எம் குருமணியைக் குறுக வல்வினை குறுகாவே" என்று பாடியுள்ளார். "எண்ணில் பல்கோடி சேவடி நின்றைஞ்ஞூற்றுவர் ஏத்தும் வீழிமிழலை என்பதால் ஐந்நூறு அந்தணர்கள் இங்கு வழிபாடியற்றும்" அர்ச்சகராயிருந்தமை தெளியலாம். "திக்கெலாம் குலவும்

புகழ்த்திருவீழிமிழலை" "திக்கெலாம் நிறைந்த புகழ்த்திருவீழி மிழலை" எனவருதலால் அக்காலத்துப் புகழ்மிக்க தலமாயிருந்தமை தெளிவாகிறது. "பாடலங்காரப் பரிசில்காசருளி, பழுத்த செந்தமிழ் மலர் ஆடி, நீடலங்காரத்து எம்பெருமக்கள் நெஞ்சினுள் நிறைந்துநின்றான்" என்பதால்இறைவன்சம்பந்தருக்கும், அப்பருக்கும் படிக்காசு வழங்கியமை புலனாகிறது.

## அகத்துறைப்பாடல்கள் :

சேந்தனார் திருவிடைக்கழிமுருகனைத் தலைவனாகக்கொண்டு "மாலுலாம் மனங்கொண்டு என்கையில் சங்கம் வவ்வினான்" என்று தொடங்கும் அகத்துறைப் பாடல்களைக் கொண்ட திருவிசைப்பாப் பதிகம்பாடியுள்ளார். "தெருண்டவைதிகர்வாழ் திருவிடைக்கழி" என்றும், "திடங்கொள் வைதிகர்வாழ் திருவிடைக்கழி" என்றும், தெரிந்தவைதிகர்வாழ்திருவிடைக்கழி என்றும் பாராட்டப்படுவதால், வைதிக அந்தணர் அதிகம் வாழ்ந்தமை புலனாகிறது.

திருக்கீழ்க்கோட்டூர் மணியம்பலப் பதிகத்தில் கருவூர்த்தேவர் "தெள்ளும் நீறவன் நீறு என்னுடல் விரும்பும்: செவி அவன் அறிவு நூல் கேட்கும், மெள்ளவே அவன் பேர் விளம்பும்வாய், கண்கள் விமானமே நோக்கி வெவ்வுயிர்க்கும், என்று தன் இறையனுபவத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

## ஏகநாயகன் :

"ஒருவன் என்னும் ஒருவன் காண்க" என்பது திருவாசகம். "ஒருவனை உலகேத்த நின்ற நாளோ" என்பது அப்பர் தாண்டகம். "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" என்பது திருமூலர் திருமந்திரம். இக்கருத்தையே சேந்தனார் திருவீழிமிழலைத் திருவிசைப்பா முதற்பாடலால் "ஏகநாயகனை இமையவர்க்கரசை என்னுயிர்க்கு அமுதினை" என்று பாடுகிறார். இதனையே வடமொழி வேதமும் "ஏகம்சத்விப்ராபகுதாவதந்தி" என்று கூறுகிறது. உலகியலில் இந்தியா ஒன்றே அது பல மாநிலங்களையும், அம்மாநிலங்களில் பலமாவட்டங்களையும் கொண்டு திகழ்கிறது. அதுபோல் தெய்வ உருவங்கள் பல வாயினும் அவ்வுருவங்கள் வாயிலாக வரும் அருள் ஒருபரம் பொருளினுடையதே என்பதை உணர்வோமாக. இந்தியா பலமாநிலம், மாவாட்டம், வட்டங்களாகப் பிரிந்து பலவாயிருப்பினும் அங்கெல்லாம் ஊடுருவி அருள் வழங்குவது இந்தியப் பெருநாட்டின் ஜனாதிபதி ஒருவரின் ஆற்றலே என்பதை ஒப்பு நோக்கி உணர்ந்து உயர்வோமாக.

என்னை விரும்பினன் :

திருமுகத்தலைப்பதிகம் 'புவனநாயகனே' என்ற பாடலில் "பணிசெய்வார்க்கு இறங்கும்பசுபதி" என்று பரமனின் தன்மை கூறியுள்ளார். புனல்பட உருகி என்ற பாடலில் "அடியேன் வினைபடும் உடலம் நீ புகுந்து நின்றமையால், விழுமிய விமான மாயினதே" என்று அகமிக மகிழ்கிறார். கங்கைகொண்ட சோளேச்சரப் பதிகத்தில், பிரமன் அன்னமாய் விண்ணில் பறந்து பரம்பொருளைத் தேடினன், ஆனல் பரம்பொருளாகிய நீயோ சிறியவனுகிய என்னை விரும்பி என் உள்ளம் புகுந்தாய் இவ்வெளிமையை என்றும் மறவேன் என்றுருகிப் பாடுகிறார்.

தத்தை (கிளி) யங்கனை யார் தங்கள் மேல் வைத்ததயாவை நூறுயிரம் கூறிட்டு அதில் ஒரு கூறு ஆண்டவனிடம் வைத்த வர்க்குஅமருலகுஅளிப்பவன் இறைவன் என்று இன்புற்றுப்பாடி நமக்கு அறிவுறுத்துகிறார்.

" மங்கையோடிருந்தே யோகு செய்வானை " என்பதால் இறைவன் விருப்பு வெறுப்பில்லாதவன் என்பதையும், விகார உணர்ச்சி இல்லாதவன் என்பதையும் தெளிவுபடுத்துகிறார். " நேரிழையைக் கலந்து நின்றே புலன்களைந்தும் வென்றானை " என்ற அப்பர் திருமொழியும் ஒப்பு நோக்கி நினைக்கத்தக்கது.

மூவாயிரவரொடும் குலாவிய கூத்தன் :

பூந்துருத்தி நம்பிகாட நம்பி ஒருபாடலில் அடியார்களைப் போற்றி அவர்கள் அமருலகம் ஆள நீ அங்குச் செல்லாமல் தில்லையில் மூவாயிரவருெடும் குலாவிக் கூத்தாடினையே என்று தில்லைவாழ் அந்தணர்பெருமைபேசுகிறார். 'கடியார்கணம்புல்லர் கண்ணப்பர் என்று உன்அடியார் அமருலகம் ஆள நீஆளாதே முடியாமுத்தீவேள்விமூவாயிரவரொடும் குடிவாழ்க்கைகொண்டு நீகுலாவிக்கத்தாடினையே'என்பதுஅப்பாடல்.எம்பந்தவல்வினை நோய் தீர்த்திட்டு எமையாளும் சம்பந்தன், என்றும் அல்லியம் பூம்பழனத்துஆமூர் நாவுக்கரசை, செல்லநெறிவகுத்தசேவகனே என்றும், "களையா உடலோடு சேரமான் ஆரூரன், விளையா மதமாரு வெள்ளானை மேற்கொள்ள என்றும் மூவர்முதலிகளைப் போற்றியுள்ளார். மணிவாசகரை இதில் குறிப்பிடாதது அவர் காலத்தால் பிந்தியவர் என்று எண்ண இடந்தருகிறது.

பொன்வேய்ந்தான் :

கண்டராதித்தர் சோழர்மரபினர். வெங்கோல்வேந்தன் தென்னன்நாடும், ஈழமும் கொண்ட திறல் செங்கோற்சோழன்

கோழிவேந்தன் செம்பியன் பொன் அணிந்த அணிதில்லை அம்பலம்" என்று பாடியுள்ளார். சூரியன் மகன், மனு; அவன் மகன் இரணியவன்மன். அவன்தான் முதன் முதலில் சிற்றம் பலத்திற்குப் பொன்வேய்ந்தவன். அவன் மரபினரான சோழர் களும் பின்னே பொன் வேய்ந்துள்ளனர்.

திருவாலியமுதனார் தம் திருவிசைப்பாவில் தில்லைப்பாடலில் "பந்தபாசமெலாம் அறப்பசுபாசம் நீக்கிய பன் முனிவரோடந் தணர் வணங்கும் அம்பலவன்" என்பதால் அம்பலவன் பெருமை பகர்ந்துள்ளார்.

## தமிழிசை கலந்த சிற்றம்பலம் :

"அன்னநடையார் அமுதமொழியார் அவர்கள் பயில் தில்லைத், தென்னன் தமிழும் இசையும் கலந்த சிற்றம்பலந் தன்னுள், பொன்னும் மணியும் நிரந்த தலத்துப் புலித்தோல் பியற்கிட்டு, மின்னின் இடையாள் உமையாள்காண விகிர்தன் ஆடுமே". என்ற பாடலால் தமிழும் இசையும் சிற்றம்பலத்தில் கலந்து நின்றமையை விளக்கியுள்ளார்.

"சந்தும் அகிலும்" என்ற பாடலில் "நிவ வின்கரைமேல் உயர்ந்த மதில் தில்லைச், சிந்திப்பரிய தெய்வப்பதியுள் சிற்றம் பலம்" என்பதனல் வெள்ளாற்றின் கரையில் சிதம்பரம் உண்மையைக் குறிப்பிடுகிருர்.

## திருவருட்சிந்தனை :

இன்னோரன்ன பற்பல உண்மைகளை உணர்த்தும் இத் திருவிசைப்பாப்பாக்களை ஓதி உணர்ந்து உய்தி பெறுவோமாக. இன்று திருமாளிகைத்தேவரும், திருமூலதேவரும் முத்திப் பேறெய்தித் திருக்கோயில் கொண்டிலங்கும் இப்புண்ணியத் தலமாம்திருவாவடுதுறையில் துறைசை ஆதீனக்குருமணிகளின் முன்னிலையில் கோமுத்தீசர் ஆலயத்தில் திருஇசைப்பா முற்றோதலும், திருமூலர் திருமந்திரத்துள் முதல் மூன்று தந்திரங் கள் முற்றோதலும் நிகழ்ந்துள்ளன. இத்திருமுறை வேள்வி நம்மையும் நாட்டையும் செம்மை செய்யும் வல்லமை மிக்கது. எல்லோரும் எல்லா நலமும் பெற்று இனிதுவாழ ஸ்ரீ செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

இசைப்பா ஓதி இன்புறுவோம்.

# தருமை ஆதீனக் குருமூர்த்திகள்
# தோத்திரப் பாமாலை

தருமை ஆதீனப் புலவர்
டாக்டர் திரு. சொ. சிங்காரவேலன், எம்.ஏ., பிஎச்.டி.,

## முதற்குரவர்

### 1. ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள்

சீவில்லி புத்தூரில் அவதரித்துச்
சிவநெறியும் தவநெறியும் செழித்திட்டோங்கப்
பூவில்லிக் கடங்காத புனித மூர்த்தி
பொற்கழலைக் கூடலிலே கூடிநின்று,
தாவில்லாப் பெட்டகத்தே பிரானைக் கொண்டு,
தமிழ்க்கமலை ஞானப்ர காசர் தம்மைக்
கோவில் சித்தீச்சரத்தே குருவருளைப் பெற்றுக்
குருமணியாய் தருமைவந்த கோவே போற்றி! (1)

சொக்கநாதக் கலித்துறையும், குருவைப் போற்றிச்
சொல்லெடுத்த கலித்துறையும், வெண்பா நூலும்,
மிக்கவருட் சிவபோக சாரம் என்ற
மேலான அநுபூதி மாலை தானும்,
தக்கதச காரியமாம் அகவல், ஆறு
தமிழ்ச்செய்யுள் பிராசாத சட்கம், முத்தி
ஒக்கநிச்ச யித்துரைத்து அடியேம் உய்ய
ஒன்பதுரத் தினமாலை உரைத்தாய் போற்றி! (2)

"செங்கமலப் பொற்பாதம்" பதியப் பெற்ற
செறிவதனல் சீவன்முத்தி நிட்டை கூடி
"இங்கொன்றும் இரண்டுமற"க் கூட்டிப் பின்னே
இணையில்லா ஆனந்த பரவசத்தால்
அங்கவரை அமைத்தருளின் அடியார் வேண்ட
அருட்சச்சிதானந்தர்க் கருளை யீந்துப்
பொங்குமின்ப பூரணத்தே கலந்த எங்கள்
புனிதஞான சம்பந்தர் பொற்றுள் போற்றி! (3)

## 2. ஆனந்தபரவச தேசிகர்

"இறைவனடி ஞானமே ஞானம்" என்ற
எழிற்சித்தி நெறியினிலே இதயங் கூடிக்
குறைவறுநற் பரமகுரு ஞானம் கூட்டக்
குறியிறந்து தீவிரத்தில் அதீதம் மேவி
இறையருளில் தலைப்பட்டுக் கிழக்கு நோக்கி
இருந்துசிவ ஆனந்த அத்வைதத்தே
நிறைந்த பிரான் அநுபூதி நிலையில் நிற்கும்
ஆனந்த பரவசர்தம் நிழற்றாள் போற்றி! (4)

## 3. சச்சிதானந்த தேசிகர்

"மீளஎழுந் தருளுக"வென் றடியர் கூட்டம்
மிகுகண்ணீர் மழைவார வேண்டி நிற்ப
ஆளுடையார் வெளிப்பட்டு உபதேசித்தே
அருட்பாடல் ஒன்றால்மெய்ஞ் ஞானம் எய்தத்
தாளமர்ந்து தருமை யருள் அரசை யேற்றுத்
சிவஞானத் தவம்பெருக்கி மரபில் நின்றே
ஆளவென வந்தகுரு சச்சிதானந்தர்
அடிமலர்கள் அனுதினமும் போற்றி வாழ்வாம். (5)

## 4. மாசிலாமணி தேசிகர்

பாதமலர் மீதிட்ட மலர்கள் நால்வர்
பாடலமர் ஏடுகளில் இருப்பக் காட்டி,
தீதகற்றி அன்னைக்கு முத்தி தந்து,
தீவிடத்தால் இறந்தோனை உயிர்க்கச் செய்து,
கோதகற்றிக் குமரகுரு பரரை ஆண்டு
குளிர்காசி மடந்தோன்றக் கருணை செய்து
ஏதமறுத் தெமையாளச் சிவமாய் நின்ற
எழில்மாசி லாமணியார் இணைத்தாள் போற்றி! (6)

## 5. ஞானசம்பந்த தேசிகர்

தென்பாண்டி யாத்திரையில் திருக்குற் றாலத்
தீர்த்தத்தே பெருவெள்ளம் பெருகக் கண்டு
துன்புற்றோர் துயர்துடைத்து, அடியார் கூட்டம்
தொழுதெழவே தீக்கையருள் வாய்மை மேவி,
முன்புறுமா சித்தாந்த முத்தி தன்னை
நிச்சயித்த நூற்குரையைத் தந்த வெள்ளி
அம்பலவா ணர்க்கருளும் கருணையாளர்
அருள்ஞான சம்பந்தர் அருட்டாள் போற்றி! (7)

(தொடரும்)

# போதமும் சித்தியும்

டாக்டர். திரு. மு. சிவச்சந்திரன்
தருமபுரம்.

( மலர் 49. இதழ் 11. பக்கம் 480 இன் தொடர்ச்சி. )

வினைகள் சடம் ஆதலின் அவற்றை உயிரிடத்துச் சேர்க்க இறைவன் வேண்டும் என்று முன் வெண்பாவில் கண்டோம். இவ்விடத்துப் பிறிதொரு கேள்வி வருகிறது. உயிர் சடமன்றிச் சித்தாகலின் அதுவே, தன் வினையைப் பொருந்திக்கொள்ளும். எனவே இறைவன் என்று ஒருவன் வேண்டாம் என்று நாத்திகரும் சமண, பௌத்த மீமாஞ்சகரும் தடை நிகழ்த்துகின்றனர். அதற்கு விடையாக அடுத்த வெண்பா விளங்குகிறது.

## இணையச் செய்யும் இறைவன் !

உயிர்கள் சடமன்றிச் சித்துஎன்பது எந்நிலையில் என்பதை முதலில் உணர்தல் வேண்டும். ஆணவத்தோடு கட்டுண்டு அறிவற்ற நிலையில் கிடக்கும் பெத்தகாலத்தில் உயிர் சடமே ஆகும். அதிலிருந்து உயிரைப்பிரித்து, வேண்டும் கருவிகரணங்களைத்தந்து உலகில் உலவ விடும்போது தான், உயிரானது வளர்ச்சி நிலையில் சித்து ஆகிறது. எனவே ஆணவத்தோடு கட்டுண்டு கிடக்கும் அக்காலத்தில் அந்தஉயிர் தானே சென்று வினையைப் பொருந்துதல் ஒருக்காலும் இயலாது என்பது கருத்து. அக்காலத்தில் இறைவன்தான், வினையையும் உயிரையும் கூட்டுகின்றான்.

இரும்பு தனியே கிடக்கிறது; காந்தம் தனியே கிடக்கிறது. இரண்டும்இணையுமோ? இரண்டையும் நேர்கோட்டில் ஒருவன் எடுத்துப் பிடிக்கும் பொழுதுதானே இணைகின்றன. அது போலவே இறைவன் உயிரையும் வினையையும், தான் முன்னின்று சேர்க்கின்றான். அப்பெருமான் அங்ஙனம் கூட்டுவிக்க வில்லையேல்அப்பெத்த காலத்தில் யார் இதனைச்செய்யப் போகிறார்? என்று ஆசிரியர் கேட்கின்றார்.

" அவ்வினையைச்செய்வதனில் அவ்வினைஞர்தாம்சென்றங்கு
அவ்வினையைக் காந்த பசாசம் போல் — அவ்வினையைப்
பேராமல் ஊட்டும் பிரானின் நுகராரேல்
ஆர்தாம் அறிந்தணைப்பார் ஆங்கு "

என்னும் வெண்பா மேற்காணும் கருத்துக்களை விளக்குகிறது.

## அநாதி வினையும் ஆண்டவனும் :

அடுத்து, வினைபற்றிய கேள்வி தொடர்கிறது. வினை என்பது - அதாவது கன்மம் என்பது அநாதி என்னும்கருத்துத் தொடர்பாக கேள்வி எழுகிறது. ஆதி இல்லை என்பதே அநாதி ஆகும். இல்லாதது எதுவும் தோன்றாது என்னும் சற்காரிய வாதத்தின்படிப்பார்த்தால் ஆதி இல்லை என்பது பொருந்து மாறில்லை. வினை என்பதே ஒன்றில்லைஎனில், இல்லாத ஒன்றை எப்படி உயிரோடு பொருத்த முடியும் என்று ஆகும். எனவே வினைபற்றித் தெளிவான ஒரு கருத்தினைத் தருதல் வேண்டும் என்னும் நிலையில் அடுத்த வெண்பா வருகிறது.

நெல்லின் கண் உமியும் செம்பின்கண் களிம்பும் எப்பொழுது தோன்றியன என்று சொல்ல முடியுமா? உமியும் களிம்பும் புதியதும் அன்று; பழமைதான் எனில் அவற்றிற்குத் தோற்றம் தெரியவில்லை. எனினும் இவை இருப்பது என்னவோ உண்மை. அதுவே அநாதி. அதுபோல மாயையும் கன்மமும் ஆணவமும் உயிர்கள் உள்ள அன்றே உள்ளன. எனவே மும்மலங்களுமே அநாதியாகும்.

அங்ஙனம் எனில், அநாதியான அவற்றை (மாயையும், கன்மங்களையும்) இறைவன் உயிர்களுடன் கூட்டுவிக்கின்றான் என்பது எங்ஙனம் பொருந்தும் என்னும் கேள்வி எழுகிறது. முன்பே முளைத்து எழுந்துள்ள தாமரையை வாடச்செய்தலும் மலரச்செய்தலும் கதிரவனின்செயல்; அதுபோலே இறைவனும் முன்பே உள்ள வினைகளை முன்பே உள்ள உயிர்களோடு கூட்டுவித்தலைச் செய்கின்றான் என்று விளக்குகின்றார் மெய்கண்டார். இக்கருத்துக்களை,

" நெல்லுக்கு உமியும் நிகழ் செம்பினிற் களிம்பும்
சொல்லில் புதிதன்று தொன்மையே — வல்லி
மலகன்மம் அன்றுளவாம்; வள்ளலால் பொன்வாள்
அலர் சோகம் செய்கமலத் தாம் "

என்னும் வெண்பா விளக்குகிறது. இதுவரை வினைபற்றிய உண்மைகளைக் கூறிவந்தார் ஆசிரியர். இனி, இவ்வினைகளின் செயல்பாடாகிய பிறப்பு உண்மைகளைக் கூறுகின்றார்.

### ஆன்மாவும் அடுத்த பிறவியும் :

ஓர் உடம்பை விட்டுப் பிரிந்த உயிர், மீளவும் மற்றோர் உடம்பை எடுத்தல் எங்ஙனம்? என்னும்வினாவிற்குவிடையாக அடுத்த வெண்பாவைக் கூறுகின்றார்.

உயிர், உடலை விட்டுப் பிரிந்து விட்டநிலையில், கண், காது முதலிய உறுப்புக்களை உடைய தூல உடம்பு கெட்டு அழியும். பின்பு, (தூல உடம்புபோல அழிதல் இன்றி உலகம் உள் அளவும் நிலைபெற்றிருப்பதாகிய) சூக்கும உடம்பே, துறக்கம் அல்லது நிரயம் அதாவது சொர்க்கம் அல்லது நரகத்தில் நிற்றற்குரிய வேறு தூல உடம்பை வினைக்கு ஈடாகத் தோற்று விக்கும். உயிர் அந்த உடம்போடே பொருந்தித் துறக்கம் அல்லது நிரயத்தில் சென்று அங்குள்ள இன்பதுன்பங்களை நுகர்ந்து, அவ்வினை ஒழிந்தபின்பு, நனவின்கண் நிகழ்ந்த வற்றைக் கனவின்கண் மறந்து அறிவு வேறுபடுதல் போலத் தான் முன்னே நிலவுலகில் அறிந்து நின்றவற்றையும் பின்வேறு உடம்போடு கூடிச் சொர்க்க நரகங்களில் சென்று அங்கு அனுபவித்தவற்றையும் அறவே மறந்து, வேறு அறிவுடையதாய், முன்பு அனுபவித்துத் தொலைத்த வினைகளை அடுத்து, இனி அனுபவிக்க வேண்டிய வினைக்கு ஈடான பிறப்பில் மனம் அவாவை உண்டாக்கித் தள்ள, எஞ்சி நின்ற வினையினால் சூக்கும உடம்பே உடம்பாகச் சென்று மனம்செலுத்திய அந்த பிறப்பிற்குரிய கருவிலே பொருந்தும் (உயிர்) என்பது கருத்து.

"கண்ட நனவை கனவுணர்வின் தான்மறந்து
விண்படர்ந்தத் தூடு வினையினால் — கண் செவி கெட்டு
உள்ளதே தோற்ற உளம் அணுவாய்ச் சென்றுமனம்
தள்ள விழும் கருவில் தான்"

என்னும் வெண்பாவில் இக்கருத்துக்கள் விளக்கப் பெறு கின்றன.

### தூல உடம்பும் சூக்கும உடம்பும் :

தூல உடம்பு, இம்மண்ணுலகத்திலும், சொர்க்கம் நரகத் திலும் உயிருக்குக் கிடைக்கிறது. சூக்கும உடம்பு, உயிரோடு

பிரிப்பின்றி நிற்பது. தூல உடம்புகள் வினை அனுபவம் முடியும் வரை இருந்து அழியும் நிலையன. சூக்கும உடம்பு உலகம் உள்ளளவும் உயிரோடு இருக்கும்நிலையது. சூக்குமஉடம்புடன் கூடியுள்ள உயிர், துறக்க நிரயத்தில் அனுபவம் பெறும் பொழுது தூல உடம்பைப் பெறுகிறது என்றால் அந்தத் தூல உடம்பு எப்படி வருகிறது எனும் கேள்வி எழுவது இயல்பு. தூல உடம்பிற்குக் காரணம் மகாபூதங்கள் ஆதலின் இவற்றால் தோற்றுவிக்கப் பெற்ற பூத உடம்பு இங்கேயே அழிந்துவிட்ட நிலையில் மீளவும் தூலஉடம்பு தோன்றுகிறது என்பது எப்படிப் பொருந்தும் என்பது வினா. சூக்கும உடம்பு தன்மாத்திரை களினால் ஆனது. பூதங்களுக்குக் காரணமாகிய தன்மாத்திரை கள் இருக்கும் வரையிலும் அதாவது சூக்கும உடம்பு இருக்கும் வரையிலும் அதனிடத்துத் தூல உடம்பு தோன்றுவதும் சாத்தியமே ஆகும் என்பது அவ்வினாவிற்குரிய விடை. நில உலகத்தில் உள்ள தூலஉடம்பு பூதனாசரீரம் அல்லது பௌதீக சரீரம் எனப்படும். துறக்கத்திற்குரிய தூல உடம்பு பூதசார உடம்பு என்றும் நரகத்திற்கு உரிய தூல உடம்பு யாதனா சரீரம் என்றும் ஆகும். இவ்வெண்பாவில் மூன்று மாற்றங்கள் குறிக்கப்பெற்றன. மண்ணிலிருந்து விண்ணிற்குச் செல்கிறது உயிர் என்பதனால் இடமாற்றமும், மண்ணிலும் விண்ணிலும் வேறுவேறு தூல உடம்புகளைப் பெறுகிறது என்பதனால் உடல் மாற்றமும், நனவினைக் கனவில் மறந்து விடுதல்போல, உயிர், முன்பிறப்பை மறந்து மறுபிறப்பை எடுக்கிறது என்பதனால் அறிவு மாற்றமும் விளக்கப்பெற்றுள்ளன.

மண்ணில்தான் செய்த செயல்கள், விண்ணில் சொர்க்க நரகங்களில் இன்பதுன்பங்களை அனுபவிக்கும் காலத்து உயிரின் நினைவில் இருக்கும் என்றும் ஆனால் மறுபிறப்பை எடுக்கும்பொழுது முன்பிறவிச் செயல்கள், சொர்க்க நரக இன்பதுன்பங்கள் ஆகியன உயிரின் நினைவில் இருக்காது என்றும் அறிதல் வேண்டும். புராணங்கள் பலவும் சொர்க்கம் நரகம் குறித்துக் கூறும் செய்திகள் தத்துவ நூல்களிலும் பதிவாகி இருப்பதை உணர்தல் நல்லது. உயிரானது, வினையின் நுகர்வினை அனுபவிக்கும் இடங்கள் இரண்டு. ஒன்று மண்ணுலகம், பிறிதொன்று விண்ணுலகம். மண்ணுலகத்தில் அனுப விப்பது, கொண்டு வந்த பிராரத்த வினையை; விண்ணில் அனுபவிப்பது இப்பிறவியில் சேர்த்த ஆகாமிய வினைகளின் ஒரு பகுதியை; பழைய சஞ்சிதமும் இந்த பிறவியில் ஆகாமிய வினைகளின் பாக்கியும் தான் அடுத்த பிறவிக்குப் பிராரத்தமும் சஞ்சிதமும் ஆகின்றன எனலாம்.

**வருவினையின் உறுபயன் :**

பிராரத்தம் அதன் பயனைக் கொண்டு வந்த பிறவியில்தந்து விடும். "ஏன்றவினை உடலோடுஏகும்" என்பதுதிருஅருட்பயன். சஞ்சிதம் ஒருபிறவியில் பயனைத் தராது. பிராரத்த வினையை அனுபவிக்கும் காலத்து உயிரின் தகுதிப்பாட்டினால் தள்ளுபடியாக வாய்ப்புண்டு. இனி ஆகாமியம் பற்றியே கருத்து விளக்கம் தேவை. சீவன் முத்தர்களுக்கு ஆகாமியம் இல்லை. ஏனெனில் அவர்கள் ஏகனாகி இறைபணிநிற்பவர்கள். எல்லாம் அவன் செயல் என்று நின்று தன்செயலற்றுத் தான் அற்று நிற்பவர்கள். ஆதலின் அவர்களின்ஆகாமியத்தை ஆண்டவனின் அருளே சுட்டுவிடும் என்பது கருத்து. திருவருட்பயன் எனும் நூல் அதனையும் கூறுகிறது. "இடை ஏறும்வினை தோன்றில் அருளே சுடும்" என்கிறது. சராசரி உயிர்களுக்கு ஆகாமியம் உண்டு. அவ்வுயிர்களுக்கு, வரும் வினையாகிய ஆகாமியத்தின் பயன், மூன்று நிலைகளில் கிடைக்கிறது. ஓர்இடம்: இப்பிறவியிலேயே கிடைக்கும்; பிறிதோர் இடம்: விண்ணில் சொர்க்க நரகத்தில் கிடைக்கும்; மற்றும் ஓர்இடம்: அடுத்த பிறவியில் கிடைக்கும். ஆகாமியத்தின் பயன் இப்பிறவியிலேயே கிடைக்கும் என்பதற்குச் சான்று :- திருக்குறளும் சுந்தரர் தேவாரமும் ஆகும். இப்பிறவியில் ஓர்மனிதர் கொல்லாமை எனும் விரதத்தை மேற்கொண்டு ஒழுகினால் அவரின் இறப்பு நாள்கூடத்தள்ளிப் போடப்படும் என்கிறார் வள்ளுவர்.

"கொல்லாமை மேற்கொண்டு ஒழுகுவான் வாழ்நாள்மேல்
செல்லாது உயிருண்ணும் கூற்று"

என்பது அக்குறள். இதற்கு உரை எழுதவந்த பரிமேலழகர், "மிகப்பெரிய அறஞ் செய்தாரும் மிகப் பெரிய பாவஞ் செய்தாரும் முறையானன்றி இம்மை தன்னுள்ளே அவற்றின் பயன் அனுபவிப்பர் என்னும் அறநூல் துணிவு பற்றி, இப் பேரறம் செய்தான் தானும் கொல்லப் படான்; படானாகவே அடியிற்கட்டிய வாழ்நாள் இடையூறின்றி எய்தும் என்பார், வாழ்நாள்மேல் கூற்றுச் செல்லாது என்றார். செல்லாதாகவே காலம் நீட்டிக்கும்; நீட்டித்தால் ஞானம் பிறந்து உயிர்வீடு பெறும்என்பதுகருத்து" என்றுஎழுதுகிறார். இது, ஆகாமியத்தில் உள்ள நல்வினையால் வரும் இப்பிறவி நன்மை கூறப்பட்டது. இதில்வரும் தீவினையினால் வரும் தீமை குறித்துச் சுந்தரர், திருப்புறம்பயம் தேவாரப் பாடல் ஒன்றில் அருளுகின்றார்.

குற்றொருவ்வரைக் கூறைகொண்டு
கொலைகள் செய்த களவெலாம்
செற்றொருவ்வரைச் செய்த தீமைகள்
இம்மையே வரும் திண்ணமே ”

என்று அருளுகின்றார். இதனால்மிகப்பெரும் பாவத்தின் பயனும் மிகப்பெரும் புண்ணியத்தின் பயனும் இம்மையிலேயே வரும் என்பது விளக்கப் பெற்றது. மறுமையில், ஆகாமியத்தின் பயன் சொர்க்க நரகத்தில் கிடைக்கும் என்பது சிவஞானபோத வெண்பாப்பாடலாலும் புராண நூல்களாலும் விளங்குகின்றது. இவ்விரண்டுநிலையிலும் அனுபவித்ததுபோக பாக்கியுள்ளவினை அனுபவம், மறுபிறவிக்கு ஆகும் என்பது கருத்து ஆகிறது.

(தொடரும்)

---

## கடிதம்

**P. அருள்நமச்சிவாயன்,** தஞ்சாவூர்
வழக்குரைஞன். 15—10—90.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் பொன்னார் திருவடிகட்கு, வணக்கங்கள்.

நன்றியால் வாழ்வதுள்ளம் உலகுக்கொரு நன்மையாலே என்ற நம்முடைய ஆதிபரமாசாரியராகிய குருஞானசம்பந்தர் அருளிச் செய்ததற்கிணங்க எளியேனின் நன்றியை ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் திருவடிக் கமலங்களில் சமர்ப்பிக்கின்றேன். 1984 இல் நடந்த அனைத்துலக சைவ சித்தாந்த மாநாட்டில் திரு. N. R. வழியாகத் திருமடத்தில் வெளியிடப்பட்ட நூல்களை வெளிக் கொணர்வதில் அவருக்கு உறுதுணையாக இருந்ததால் அந்தப் பணியில் அடியேனைத் தொடர்ந்து ஈடுபடுத்திக் கொண்டு வந்துள்ளேன். ஞான சம்பந்தத்தில் வெளியிடப்படும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் அருளுரைகளைப் படித்து அடியேனுக்குத் தெளிவு கிடைக்கும் போதெல்லாம் சந்நிதானத்தில்கடிதம் மூலம் தொடர்புகொண்டுள்ளேன்.

சந்நிதானத்தில் திருக்கண்சாத்தப் பெற்ற திருமடத்தின் அடியவனாக எளியேனை ஏற்றுக் கொள்ளப் பெற்ற பெரும் பேற்றுக்கும் திருவருளுக்கும், குருவருளுக்கும் மறுமுறையும் நன்றி தெரிவித்து அமைகிறேன்.

# உயர்ந்தது சைவமா அசைவமா ஆய்வில் புது முடிவு

சைவ உணவுகள் அதிகச் சத்துகொண்டவை. ஆரோக்கியமானது. குறைந்த செலவைகொண்டது என்று சைவஉணவின் சிறப்பினை ஆய்வு செய்யும் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

அசைவ உணவில் ஊட்டப்பொருள்கள் அதிகம். அது அதிக பலத்தை அளிக்கிறது என்பது ஒரு தவறான எண்ணம் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

டில்லியில் உள்ள ஆரோக்கியம் மற்றும் சத்துணவு ஆய்வு நிலையம் சத்துப்பொருட்களை ஒப்பிடும் வகையில் சைவம் மற்றும் அசைவ உணவு வகை பட்டியல் தயாரித்துள்ளது.

இந்தப் பட்டியலில் இந்தியாவின் உணவுப் பழக்கத்தில் உள்ள பல சைவ அசைவ உணவு பொருட்கள் உள்ளன. அவற்றில் உள்ள சத்துத்தன்மையும் விளக்கப்பட்டுள்ளன.

நிபுணர்கள் கூறியுள்ளதாவது :- இதில் ஒரு கிராம் புரத சத்தும், ஒருகிலோகிராம் எரிசக்தியின் தேவையையும் கருத்தில் கொண்டு, இரண்டிலும் 10 உணவு பண்டங்களுக்கு ஆகும் செலவை கணக்கிட்டபோது சந்தேகத்திற்கு இடமில்லாமல் சைவ உணவே சிக்கனம் என்ற கருத்து நிரூபணமாகியது.

சராசரி ஒரு கிராம் புரதச்சத்தை சைவ உணவில் இருந்து பெற ஆகும் செலவைப்போல் அசைவ உணவில் இருந்து அதே அளவு புரதத்தை பெற 10 மடங்கு அதிகம் செலவிட வேண்டும்.

அசைவ உணவின்பால் உள்ள இனம்புரியாத நாட்டத்தைப்போக்கமுயலும் விஞ்ஞானிகள், பால் மற்றும் முட்டையில் இருந்து பெறக்கூடிய புரதச்சத்தை, பருப்பு வகைகளைக் கொண்ட அருமையான சைவ உணவுகளில் இருந்து பெற முடியும் என்கின்றனர்.

அசைவ உணவுகளில் இருந்து கிடைக்கும் புரத சத்தை விட கூடுதலான புரதசத்து வேர்க்கடலையில் இருந்தும் சோயா பீன்ஸில் இருந்தும் கிடைக்கின்றன.

சைவ உணவு சுலபமாக ஜீரணிக்கக் கூடியது. இதில் அதிகமாக இருக்கும் நார்சத்து உணவு பாதையை நல்ல நிலையில் வைத்துக்கொள்கிறது. உணவுப் பாதையில் புற்று நோய் ஏற்படாமல் பாதுகாக்கிறது.

அசைவ உணவை அதிகம் சாப்பிடுவதால் உடல் பருத்து விடுகிறது. ரத்தக்குழாயில் நோய்கள் ஏற்படுகின்றன. வயிற்றில் புற்றுநோய் தோன்றுகிறது என்று மருத்துவ ஆய்வுகள் தெரிவித்துள்ளன.

சைவ உணவில் கொழுப்பு சத்து மிகக் குறைவாகவே உள்ளது. அதேநேரத்தில் அசைவ உணவில் கொழுப்பு சத்து மிக அதிகமாக உள்ளது. இதன் காரணமாக அசைவ உணவு சாப்பிடுவோர்களுக்கு இருதய நோய் வரும் அபாயம் மிக அதிகமாக உள்ளது.

இதைத்தவிர இந்தியாவில் உள்ள கசாப்புக் கடைகளில் சுகாதாரம்என்பதேசிறிதும்கிடையாது. இங்குத்தொற்றுநோய்க் கிருமிகள் சுலபமாக மாமிசங்களில் தொற்றிக் கொள்கின்றன. தொற்றுக்கிருமிகளைகொண்ட மாமிசங்கள் மார்க்கெட்டுகளில் தங்கு தடை இன்றி வியாபாரம் ஆகின்றன. மாமிச கடைகளிலும் சுகாதாரத்தைப்பற்றி யாரும் கவலைப் படுவது கிடையாது. திறந்த இடத்தில் தோல் உரிக்கப்பட்ட ஆடுகளும், மாடுகளும் தொங்கிக்கொண்டு இருப்பதை எங்கும் காணலாம்.

நோய் கொண்ட கால்நடைகள் மலிவாக விற்கப்படுகின்றன. அவை வெட்டப்பட்டு மார்க்கெட்டுகளுக்கு அப்படியே வந்துவிடுகின்றன. இதன்மூலம் இவற்றை சாப்பிடுபவர்களுக்கு நோயும் நேரடியாக உடலில் சேர்ந்து விடுகிறது. வயிற்றுப்போக்கு போன்ற தொற்று நோய்கள் இந்த வழியில் அதிகம்பரவுகின்றன. அதேபோல் புற்றுநோய்க்கொண்ட கால்நடையின் மாமிசங்களை சாப்பிடுவோருக்கும் அந்தநோய் பரவுகிறது. முட்டைகள், இடப்பட்ட48மணிநேரத்திற்குபின் சாப்பிடலாயக்கற்றவை. மார்க்கெட்டுகளில் விற்கப்படும் முட்டைகள் எவ்வளவு நாட்கள் பழமையானது என்பது தெரியாது. அதில் வளரும் தொற்றுக் கிருமிகளைப்பற்றியும் எதுவும் தெரியாது.

குளிர்பெட்டக சாதனங்கள் இல்லாததால் மாமிசக் கடைகளில் விற்கப்படும் மாமிசங்கள் அழுக ஆரம்பித்து விடுகின்றன. இயந்திர மயமாக்கப்பட்ட கசாப்புநிலையங்களில் கூட போதிய சுகாதாரம் கிடையாது.

மனிதர்களின் பற்கள், புல் பூண்டுகளை சாப்பிடும் மிருகங்களின் பற்களைபோன்றவையே, மாமிசபட்சிணிகளின் பற்களை போல் கூர்மையானவைஅல்ல. எனவே மனிதர்கள்மாமிசத்தை சாப்பிடுவது இயற்கைக்கு ஒவ்வாதது. இவ்வாறு நிபுணர்கள் கூறியுள்ளனர்.

— *தினமலர் திருச்சி 16—10—90.*

# மணிக்கடலில் முகந்த - சில முத்துக்கள்

டாக்டர் திருமதி. ப. நீலா, எம்.ஏ., எம்.ஃபில்., பிஎச்.டி.,
முதல்வர், தருமை ஆதீனக் கலைக் கல்லூரி, தருமபுரம்.

( மலர் 49. இதழ் 10. பக்கம் 476 இன் தொடர்ச்சி. )

## பொய்யுரைத்தனரோ :

சீவகன் எல்லோரையும்போல எல்லோரிடமும் கூறுவது போலக் கேமசரியிடமும் எனதாவி நீ என்று கூறினன். 'சீவகனின் முழு அன்பையும் பெற்றவள் இவளென்று மற்றவர்கள் பொருமைப்படுமாறு, புனைதாரவனே ! நீ உரைத்தது பொய் என்பதை இப்பொழுது உணர்கிறேன்' என்று அவன் பிரிந்தபோது கேமசரி புலம்புகிருள்.

எனதா வியகத் துறைவா யெனுநீ
புனைதா ரவனே பொயுரைத் தனையால்
வினையே னுெழியத் தனியே கினையே. (சிந், 1517)

ஆவியுள் இருப்பவனை அகலுதல் கூடுமோ ! இவன் அகன்று சென்றதனல் அவ்வுரை மதிப்பிழந்துபோகிறது என்று தேவர் காட்டுவது சிந்தாமணிக்காட்சி.

கம்பர் தேவரின் சிந்தனையைத் தாரையிடம் அமைத்துக் காட்டுகிருர். வாலியின் மறைவைத் தாரை நம்பவில்லை. காரணம் அவன் தன்னுயிர் தாரையிடம் இருப்பதாகக் கூறியிருந்தான். தாரையும் தன்னுயிர் அவனிடம் இருப்பதாகக் கூறியிருந்தாள். அவனுவி தன்னுள் இருக்கும்போது அவனல் எப்படி மாள முடியும் ? அதனல்தான் அவள் அவன் சாவை நம்பவில்லை. ஆனல் தானும் இன்னும் சாவாமல் இருப்பது கொண்டு, இருவரும் பொய்யுரைத்ததை எண்ணி வெட்கி நின்ருள். பொய்மை வெளிப்பட்டபோது வேதனையும் புலப்பட்டது.

செருகஆர் தோள நின்சிந்தை உளேன்எனின்
மருவார் வெஞ்சரம் எனையும் வவ்வுமால்
ஒருவேனுள் உளை ஆகின் உய்தியால்
இருவேமுள் இருவேம் இருந்திலேம். (கம். 4102)

**கண்ணின் வண்ணம் கமலமா !**

சீவகனின் முழு உருவ வருணனை முடிதொடங்கி அடிவரை அமைவதாக (கேசாதிபாதம்) சிந்தாமணியில்வருகிறது. சங்க காலந்தொடங்கி சிந்தாமணிக்காலம் வரை ஆண்மக்களின் முழு உருவவருணனை எந்த இலக்கியத்திலும் வரவில்லை என்பார்கள். ஆண்மகனை முழுமையாக வருணித்துச் சிந்தா மணியே முதலாமிடம் பெறுகிறது. (1460 – 1465) என ஆறு பாடல்கள் வருணனையமைப்பாக உள்ளன.

சீவகனின் கண்கள் தாமரை போன்றுள்ளன என்கிறார் தேவர். கடிகமழ் தாமரை கண்ணின் வண்ணமே. (சிந். 1460) கம்பர் தேவரை அடியொற்றிச் சென்றாலும் இராமாவதாரம் தெய்வாம்சமாகக் கருதப்படுவதால் வருணனையை அடி தொடங்கி முடிவரையிலுமாக (பாதாதிகேசம்) அமைக்கிறார்.

'அடிமுதல் முடியின்காறும் அறிவுற அனுமன்' காட்டினன் சீதைக்கு என்கிறார். (கம். 5265)

கண்களுக்குத் தாமரையை அவர் காட்டவில்லை. அதைக் காட்டிலும் பொருத்தமாக வேறு உவமையும் இல்லை – நான் என்ன செய்வேன் என்கிறார். இந்தவழியில் சிந்தாமணியை நினைப்பூட்டுகிறார்.

அண்ணல்தன் திருமுகம் கமலம் ஆம்எனின்
கண்ணினுக்கு உவமை வேறுயாது காட்டுகேன். (கம்.5278)

**இசை குழைந்த இன்குரல் :**

பெண்ணின் குரலினிமைக்குப் பல இசைக் கருவிகளும் ஈடுஆகாது என்பார் தேவர். கிளிமொழியும் மழலை மொழியும் அவர் குரலில் குழையும். கேமசரியின் மொழியை வருணிக்கும் போது சிந்தாமணி,

வீணையும் குழலும் யாழும் அமுதமும் கரும்பும் தேனும்
பாணியாழ் கனியும் வென்ற – தீஞ்சொல் (சிந். 1500)

எனக் கூறும். கம்பர் வாக்கு,

குழலும் வீணையும் யாழும் என்றினையன குழைய
மழலை மென்மொழி கிளிக்கிருந்து அளிக்கின்ற மகளிர்
(கம். 4840)

என அமைகிறது.

**விரியும் நிலவால் எரியும் காதல் :**

சீவகன் பிரிவு கனகமாலையை மிகவும் வருத்தியது. இராக் காலம் எழுந்த நிலவால் அவள் மேனி கருகியது என்கிறது சிந்தாமணி.

வம்புபூத்து முருகுலாய்த் தேன்கொப் புளித்து நின்றதோர்
கொம்பு வெந்தீயிடைப்பட்ட தொத்தாள் விரைசெய்
[கோதையே. (சிந். 1664)

கம்பர் சீதையின் காதல் அவத்தையை இப்படியே பாடினார்.

நீக்கம் இன்றி விரிந்த நிலாக்கதிர்
தாக்க வெந்து தளர்ந்து சரிந்தனள்
சேக்கை ஆகிமலர்ந்த செந்தாமரைப்
பூக்கள் பட்டது அப்பூவையும் பட்டனள். (கம். 558)

**கடவுட்திங்கள் கைவிளக்கானது :**

பிரிந்து செல்லும் தீவினைக் கிரங்கிய திங்கள் சீவகனுக்குக் கைவிளக்குப்போல் உதவி இருளை நீக்கி வழிகாட்டுகின்றது. பகலொளிபோல் இல்லாததனால் அதனைக் கைவிளக்கெனக் காட்டியது பொருத்தமே.

ஏறனுற் கிருளை நீங்கக் கைவிளக் கேந்தியாங்கு
வீறுயர் மதியந் தோன்ற. (சிந். 1542)

சீவகன் வழி நடக்கின்றான்.

கம்பர் தாயுரைகொண்டு தீவினை நீக்கக் கானகம் செல்ல இராமன் முந்தியபோது-கடவுட்திங்களும் உதவியதுஎன்கிறார். கைகேயி சுயநலத்திற்காகச் சிந்தித்திருந்தாலும் அரக்கர்செய்த பாவமே இதற்குத் தூண்டு கோல் எனக் கம்பர் விளக்கமும் தருவார். அதனால் தூதுவரை நிலவிய அரக்கர் ஆட்சியும் அதற்குதவிய இருளும் இரியுமாறு வந்தது தெய்வத்திங்கள்.

பொய்வினைக்கு உதவும் வாழ்க்கை
அரக்கரைப் பொருந்தி அன்னார்
செய்வினைக்கு உதவும் நட்பால்
செல்பவர்த் தடுப்பது ஏய்க்கும்
மைவிளக்கியதே அன்னவயங்
கிருள்துரக்க வானம்
கைவிளக்கு எடுத்ததுஎன்ன
வந்தது கடவுள்திங்கள். (கம். 1887)

### சந்தம் தரும் சொந்தம் :

சிந்தாமணி தந்த சந்தம் இனியது. எளியது. மெல்லின எழுத்துக்கள் விரவிய மென்சந்தம் செவிக்கு இன்பம்தருகிறது. பிரிவுத்துயர் இவ்வொலியால் ஏக்கவுணர்வையும் சேர்க்கிறது.

புனமா மயிலே பொழிலே புனலே
வனமார் வழையே வரையே திரையே
இனமா மணிசூழ் எரிபூண வனைத்
துனயான் பெறுகோ தொழுதே னுரையீர். (சிந். 1519)

கம்பருக்குச் சீதையின் துயர்காட்ட இச்சந்தம் கைகொடுத்தது. கலிவிருத்த ஒலி காதுகளை நிறைக்கிறது

கல்லா மதியே கதிர்வாள் நிலவே
செல்லா இரவே சிறுகா இருளே
எல்லாம் எனையே முனிவிர் நினையா
வில்லாளனை யாதும் விளித்திலிரோ. (கம். 5231)

சிந்தாமணி நுட்பம் கம்பர் செய்யும் அணிகளில் அங்கங்கே அமைந்து அழகைப் பெற்றதுதானே. (வளரும்)

---

### கடிதம்

புலவர் ம. சிவசம்பு, எம். ஏ., பாளையங்கோட்டை
13—10—90.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் பொன்னார் திருவடிகளுக்கு, அடியேன் சிவசம்பு வணக்கம். திருமேனி நலம் அறிய ஆவல்.

"ஞானபூமி" தீபாவளி இதழில் வெளியான வினாவிடைப் பகுதியில் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அருளிய விடை மிகவும் சிறப்பாக இருந்தது என்று சைவ அன்பர்கள் பலர் பாராட்டினார்கள். ஸ்ரீவைகுண்டம் சைவசித்தாந்த மாலை நேரக் கல்லூரி பயிற்சியாளர்கள் படித்துப் போற்றி வணங்கினார்கள். ஸ்ரீ அருணந்தி சிவாசாரியார் குருபூசையும் ஸ்ரீ மெய்கண்டார் குருபூசையும் வருவதை நினைவுகொண்டு வரலாற்றுப்பகுதியில் அகச்சந்தானம், புறச்சந்தானம் சந்தானகுரவர்கள்வரலாற்றை நடத்திய பொழுது, இதையெல்லாம் அறிவதற்கு வாய்ப்பு நல்கிய கல்லூரியையும் அதை நிறுவிய ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் பொன்னார் திருவடிகளையும் போற்றி வணங்கினார்கள்.

# சண்டேஸ்வர பிரஸாதம்

வித்யாவாசஸ்பதி, டாக்டர் திரு. இரா. நாகசாமி
சென்னை.

தமிழ்நாட்டில் சைவக் கோயில்களில் சண்டேஸ்வரர் மிகவும் சிறந்த நிலை வகிக்கும் தெய்வம். தஞ்சாவூர் மாவட்டம் திருச்சேய்ஞலூரில் பிறந்து ஒப்பற்ற சிவனடியாராகத் திகழ்ந்து சிவகணங்களின் தலைவராக உயர்ந்த சண்டேச நாயனரின் வரலாறு அனைவரும் அறிந்ததே. சண்டேஸ்வரர் எப்பொழுதும் சிவபிரானின் அடியில் அமர்ந்து விளங்கும் வள்ளலாகத் திகழ்கிறார். கங்கைகொண்ட சோழபுரத்தில் இராஜேந்திர சோழன் எடுத்துள்ள பெருங்கோயிலில் உள்ள சண்டேஸ்வர அனுக்ரஹமூர்த்தியின் சிற்பம் உலகப் புகழ் வாய்ந்தது. சண்டேச்வர தத்துவத்தையே உலகுக்கு எடுத்துக்காட்டுவது போல் உள்ளது.

தஞ்சாவூரில் முதலாம் இராஜராஜ சோழன் தான் எடுத்த பெரிய கோயிலில் பல உத்ஸவ விக்ரஹங்கள் செய்து கொடுத்தான். அவற்றில் ஒன்று சண்டேச்வர பிரஸாத தேவரின் விக்ரஹம். இது செம்பினாலானது (இக்காலத்தில் பஞ்சலோக சிலை என்கிறோம்) இது எவ்வாறு இருந்தது என்று ராஜராஜன் விரிவாகக் குறித்துள்ளான். இதைக் குறிக்கும் கல்வெட்டு இந்த உருவத்தை "சண்டேச்வர பிரஸாத தேவர்" (சண்டேச்வரருக்கு அருளுகின்ற தேவர்) என்று கூறுவது குறிப்பிடத் தகுந்தது. இந்தஉயர் நிலை அடைவதைச்சைவசித்தாந்தநூல்கள் 'சண்டீசபதம்' என்று அழைக்கும். இது குறித்து ஒரு அருமையான செய்தியை ஒரு கல்வெட்டுக் கூறுகிறது. அதைக் கீழே காண்போம்.

தென்னாற்காடு மாவட்டம், செஞ்சிதாலுக்கா மேல்சேவூரில் விருஷபபுரீச்வரர் கோயிலில் அக்கல்வெட்டு காணப்படுகிறது. இது இராஜராஜ சோழன் காலத்ததுதான். இராஜராஜன் இக் கோயிலில் பலவகைப்பட்ட பூஜைகளுக்கும், விழாக்களுக்கும், பணிபுரிவோருக்கும்ஊர்கள் அளித்துஅவ்வூர்களிலிருந்துவரும் வருவாயிலிருந்து நடத்த வகை செய்தான். முதலில் கி. பி.

1003 ஆம் ஆண்டு என்ன என்ன நடக்க வேண்டும் என்று விரிவான பட்டியல் போட்டு ஆணை வழங்கியிருக்கிறன். அதற்கு நிவந்தம் என்று பெயர். அர்த்தயாமம் உள்பட ஒவ்வொரு சந்திக்கும் திருவமுதுக்கு அரிசி, மிளகுபொடி, பருப்பு, நெய், தயிர், வெற்றிலை, (பாக்கு) அடைக்காய், திருமெய்ப்பூச்சுக்கு சந்தனம், சதாரி, அகில் முதலியவற்றுக்கு நெல் கொடுத்தான். பங்குனி உத்தரம் திருவிழா ஏழு நாள் நடத்த ஏற்பாடு செய்தான். தலைப்பறை திமிலை, மத்தளம், கறடிகை, கைம்மணி, சங்கு ஆகிய கருவிகள் வாசிக்க 12 உவச்சர்களை நியமித்தார். தேவகன்மிகளுக்கு ஆசார்ய போகமாக நெல் அளித்தான். "திருஅலகிட்டு மெழுக்கும்" இடுவார் இருவரை நியமித்தான். பிற பணிகளுக்கும் வகை செய்தான். நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு இந்தப் பணிகளுக்கு மேலும் சில வருவாய் அளித்தான். அதில் மெய்க்காவல் ஒருவனையும், பண்டாரம் பார்த்துக் கொள்ள ஒருவனையும் நியமித்தான். பண்டாரம் பார்ப்பவனுக்கு "சிவபண்டாரி" என்று பெயர். இத்துடன் கோயிலில் மூன்று ஸந்தியிலும் "திருப்பதியம் பாடுவார்" இருவருக்கும் வகை செய்தான். திருப்பதியம் பாடுபவர்களுக்கு நாள் ஒன்றுக்கு ஒரு குறுணி நெல். (அதாவது 4 படி அரிசி) இத்துடன் துணிமணிகளுக்காக தினந்தோறும் ஒரு படி அரிசியும் கொடுத்தான். இது இப்பொழுது Clothing allowance (துணிப்படி) என்கிருர்களே அதுதான். (இராஜராஜ சோழனின் மற்றொரு கல்வெட்டிலிருந்து கோயில் ஸ்ரீ கார்யத்துக்கும், திருப்பதியம் ஓதுவார்க்கும், ஒரே சம்பளம்தான் என்று அறிகிறோம். அதாவது இன்றுள்ள நிர்வாக அதிகாரிக்கு (Executive officer) எவ்வளவு சம்பளமோ அதே சம்பளம் ஓதுவாருக்கும் இருந்தது. இதைக் குறிக்கும் கல்வெட்டில்தான் சண்டேச்வரர் பற்றிய அந்த அருஞ்செய்தி உள்ளது.

கல்வெட்டுக்கள் என்றால் இன்று பதிவு செய்கிறோமே பத்திரங்கள், அவைதான். இன்று காகிதத்தில் எழுதி பதிவு செய்து வைக்கிறோம். முன் காலங்களில் கல்லில் வெட்டி பதிவு செய்து வைத்தார்கள். இவைகளுக்கு ஆவணம் என்றும்பெயர். அதாவது சட்டப்படி செல்லுபடியாகும் பத்திரங்கள். இவற்றின் இறுதியில் எல்லாக் கல்வெட்டுகளிலும், "பன்மாஹேச்வர இரக்ஷை" அல்லது "ஸ்ரீவைஷ்ணவ இரக்ஷை" என்றுமுடியும். பல கல்வெட்டுக்களில் இதை அழித்தார். கங்கை முதல் குமரி வரை செய்தார் பாவம் பெறுவார் என்று இருக்கும். அக்காலத்தில் புண்ணியம், பாபம் என்பதில் மக்களுக்கு நம்பிக்கை மிகுந்திருந்தது. இன்றும் நம் கிராம மக்களிடம் இது காணப்

படுகிறது. கோயில் சொத்தை எடுத்துக் கொண்டால் பாபம் வரும். தம் குடும்பத்துக்கும், குழந்தை குட்டிகளுக்கும்கெடுதல் வரும் என்ற நம்பிக்கைஉண்டு. கோயில் சொத்தைக்கொள்ளை யடித்தவனை ஊர்மக்கள் "பாவி" என்று பகிரங்கமாக இழித்துக் கூறுவார்கள். அதைத்தான் கல்வெட்டுக்கள் முடிவில் கூறு கின்றன.

ஆனால் இராஜராஜனுடைய இந்தக்கல்வெட்டு மட்டும் ஒரு புதுமையான முடிவைக் கூறுகிறது. கல்வெட்டில் " இத்தர்மம் ரக்ஷித்தார் சண்டேச்வர பிரஸாதம் பெறுவார் " என்றுள்ளது. அதாவது இத்தர்மத்தைக் காத்தவர்கள் சண்டேச்வரர் எந்த அருளைப் பெற்றரோ அதைப் பெறுவர் என்பது கருத்து அந்த அளவு புண்ணியம் பெறுவர் என்பது பொருள். சைவ சித்தாந்தியாக சண்டீசபதம் பெறுவர் என்பது இராஜராஜனின் கருத்து.

## சைவசமய விரதங்கள் (நோன்புகள்)

மனம் ஐம்பொறி வழிசென்று அலையாது நிற்றற்பொருட்டு, உணவைச் சுருக்கியாவது, முற்றும் உணவை ஒதுக்கியாவது, மனம், மொழி, மெய் ஆகிய மூன்றாலும் இறைவனை விதிப்படி வழிபடுதலையே 'விரதங்கள்' (நோன்புகள்) என்கிறோம்.

### சிவ விரதம் :

சோமவார விரதம், திருவாதிரை விரதம், உமா மகேசுவரர் விரதம், சிவராத்திரி விரதம், கேதார விரதம், கலியாணசுந்தரர் விரதம், சூலவிரதம், இடப விரதம், பிரதோஷ விரதம் எனச் சிவ விரதங்கள் ஒன்பது என்பர்.

### சோமவார விரதம் :

சோமவார விரதம், கார்த்திகை மாதத்தில் முதல் சோம வாரத்திலிருந்து இருத்தல் வேண்டும். சோமவாரத்தில் உண்ணா நோன்பு மேற்கொள்வது முறை. இவ்விரதம் வாழ்நாள் அளவு, அல்லது 12 ஆண்டுகள், 3 ஆண்டுகள் அல்லது ஓராண்டு இருக்கலாம்.

## கடிதம்

S. செல்லப்பெருமாள் ஸ்ரீவைகுண்டம்
22—10—90.

தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் பொன்னன திருவடிகளுக்குச் சிரந்தாழ்ந்த வணக்கத்துடன் எழுதிக்கொள்வது:

அடியேன் ஓய்வுபெற்ற வட்டார வளர்ச்சி அலுவலர். இப்போது திருவைகுண்டத்தில் வசித்துவருகின்றேன். நமது சைவ சமயத்தின்பாலும் திருமுறை இலக்கியங்கள், சித்தாந்த சாத்திரங்கள் ஆகியவற்றிலும் மிகுந்த ஈடுபாடும் ஆர்வமும் உடையவன். இவற்றை முறையாகப் பயின்று தேர்ச்சி பெற வேண்டுமென்று பலகாலமும் எண்ணிவந்தேன்.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் அருட்கொடையால் ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள் தோன்றியருளிய இவ்வூரில் சைவ சித்தாந்த மாலை நேரக் கல்லூரி ஒன்று நிறுவியருளியது என் போன்றவர்களுக்குப் பேருதவியாக அமைந்துள்ளது. இக் கல்லூரியில் முதலாண்டில் பயில்வதற்குச் சேர்ந்து ஜூலைமாதம் முதல் படித்து வருகிறேன். குருமகாசந்நிதானம் தக்க ஆசிரியப் பெருமக்களைக் கொண்டு கல்லூரியை நல்ல முறையில் நடத்தி வருவது பற்றி என்னுடைய பெருமகிழ்ச்சியையும், என்னுடன் பயிற்சி பெறும் மற்ற அன்பர்களுடைய மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள்கிறேன். நம்முடைய சைவ சமயத்தின் பழமையும், நாயன்மார்கள், சமயகுரவர்கள் ஆகியவர்கள் வரலாறுகளும், கொள்கைகளும் ஆழ்ந்த உறுதியான பக்தி உணர்வும் ஒவ்வொரு தனி மனிதனையும், நல்வழிப் படுத்து வதோடு மனச்சஞ்சலங்களையும், போக்கி பயம் தீர்த்துப் பரமானந்தத்தை நல்கும் என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை. இச்சீரிய பணிகளுக்கு, ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் தரும் ஊக்கமே பெருந்துணையாக நிலவுகின்றது. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்திற்கு மாலைநேரக் கல்லூரியில் பயிலும் மற்ற அன்பர்கள் சார்பாகவும் என் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்பணியில் குருமகா சந்நிதானம் அருட்கொடை மேன்மேலும்வளர்ந்துதொடரட்டும் என்று பிரார்த்தனை செய்து எல்லாம் வல்ல இறைவனை வாழ்த்தி வணங்குகின்றேன்.

# “காரைக்கால் அம்மையார் தொடங்கிவைத்த உத்தி”

**திரு. வி. சா. பாலசுப்பிரமணியன்,**

பேராசிரியர், மன்னர் சரபோஜி அரசுக் கல்லூரி, தஞ்சாவூர்.

சங்க இலக்கியங்களில் சில, நானூறு என்ற பாடல் எண்ணிக்கை கொண்டவை. பெரும்பாலான சங்கப்பாடல்கள் Lyric என்றழைக்கப்படும் தன்னுணர்ச்சிப் பாடல்களாகவும், உதிரிப்பாடல்களாகவும் இருந்தமையால் காலப்போக்கில் அவற்றைப் பாதுகாப்பது பெரிய பொறுப்பாக இருந்து வந்துள்ளது. பின்னர் அவை அடிமுதலியவற்றுல் பாகுபாடு செய்யப்பட்டுத் தொகுக்கப்பட்டன. இவற்றைக் கண்ணுற்ற காரைக்காலம்மையார் சிலபுதிய உத்திகளை முதன்முதல் கையாள்கிருர். அவர் அறுபத்துமூன்று நாயன்மார்களில்ஒருவர் மட்டுமல்லர். சிறந்தஇலக்கியச்சிந்தனையாளராயும், செந்தமிழ்ப் பற்று மிக்கவராயும் திகழ்கிருர். அவரது உத்தி பற்றி ஆராய முற்படுகிறது இக்கட்டுரை.

சங்க இலக்கியங்கள் கி. பி. 3, 4 ஆம்நூற்ருண்டுகளில் மேற் கூறப்பட்டவாறுத் தொகுக்கப்பட்டிருக்கலாம் இத்தொகுப் பினல் ஒரு பக்கம் சாதகமான பயனும், மற்ருெரு பக்கம் பாதகமான பயனும் ஏற்பட்டன. நானூறு என்ற எண்ணிக்கை வரவேண்டும் என்பதற்காக நானூறுக்கு மேற்பட்ட பாடல்கள் இருந்த போதிலும் அவை தொகுப்பில் இடம் பெருமல் விடப் பட்டன. இதனல் அவை மறைந்தன. அடி வரையரை அடிப் படையில், நானூறுக்கும் குறைந்த எண்ணிக்கை இருந்த பாடல்களைத் தொகுத்த புலவர்கள் சிலவற்றைப் புதியனவாக இயற்றி நானூறு என்ற எண்ணிக்கை வரும்படி செய் துள்ளனர். “ ... இவ்வமைப்பை நோக்குகையில் பலபுலவர்கள் தனித்தனியே இயற்றிய அகப்பொருட் செய்யுட்களைத் தொகுத்து அவற்றை அடி அளவால் வகைப்படுத்திய பின் அவற்றைத்தொகுத்தவர்கள் ஒவ்வொன்றிலும் நானூறுபாக்கள் இருக்கும்படி தம் காலத்துப் புலவர்கள் இயற்றியவற்றையும் சேர்த்து அமைத்தார்கள் என்று கருத இடமுண்டாகிறது ... ” என்னும் முதுபெரும்புலவர் உ. வே. சா. வின் கூற்று இங்கு சிந்தனைக்குரியது. (புறநானூறு முன்னுரை)

தொல்காப்பிய நூற்பாக்களிலும், திருக்குறள் முதலிய இலக்கியங்களிலும் இடைச் செருகல் அமைய எண்ணிக்கை பற்றிப்பாடும் வழக்கம் நூலியற்றும் ஆசிரியர்களிடையே இல்லாத குறையால் உண்டாயிற்று எனலாம்.

### இயற்பெயர் இல்லாத புலவர்கள் :

திருவள்ளுவர், தொல்காப்பியர் என்பன இயற்பெயரல்ல. குடிப்பெயர்கள் என்று அமைதி கூறலாம். சொந்தப்பெயர் இல்லாத குறை பேரிழப்பே. சங்க நூல்களிலும் பலபாக்களுக்கு அவற்றைப்பாடிய புலவர் பெயர் கிடைக்காமையால், அவர்தம் பாடல்களிலிருந்து எடுக்கப்பட்ட தொடரால் அவர்கள் அழைக்கப்பட்டனர். செம்புலப்பெயனீரார், மீனெறி தூண்டிலார், அணிலாடு முன்றிலார் போன்ற பெயர்கள் இத்தகையன. சிலப்பதிகார அரும்பதவுரையாசிரியர், திருக்குறள் பழைய உரை கண்டவர் மற்றும் தமிழ்விடு தூது இயற்றிய ஆசிரியர் முதலியவர் பெயர்களும் மறைந்தன.

### அந்தாதி பாடிய முதற்புலவர் :

போக்குவரத்துச்சாதனங்கள், செய்தித் தொடர்புக்கான எளியவழிகள் இல்லாத காரணத்தால் சங்க காலத்தில் பல புலவர்கள் தத்தம்ஊர்களிலிருந்தபடியேபாடியிருக்கவேண்டும். மதுரை போன்ற இடங்களில் அமைந்திருந்த சங்கங்களுக்கு வரமுடியாத அப்புலவர்களின் பாடல்கள் காணப்படாமையால் நமக்குக் கிட்டவில்லை. இச்சூழலில் சேரநாட்டின்கண் வாழ்ந்த காப்பியாற்றுக் காப்பியனர் பத்துப்பாடல்கள் ஒரு பொருள் பற்றிப் பாடநேர்ந்த போது ஒரு புதிய உத்தியை முதன்முதல் கையாண்டார். அதுவே அந்தாதிக்கு வித்திட்டது. உதிரிப் பாடல்கள் அழியும் அளவுக்கு அந்தாதிப்பாடல்கள் அழியா என்று கூறலாம். இவை சங்கிலித் தொடர் போலநின்று பொருள் தருவன.

### பாடியவர் பெயரை இணைத்தால் :

எனினும் காப்பியாற்றுக் காப்பியனர் தம்பெயரைத் தாம் பாடிய அந்தப் பதிற்றுப்பத்து அந்தாதிப் பாடலில் சேர்க்கத் தவறிவிட்டார். திணை, துறை, மற்றும் பாடப்பட்ட சூழல் ஆகியவை சில பாடல்களின் இறுதியில் இணைக்கும் வழக்கம் இருந்தமையால், பாடல்களுக்கு அவையும் மறைந்தன. தற்சமயம் சில பாடல்களுக்கு இத்தகைய அடிக்குறிப்புகள்

பொருந்து மாறில்லை. பின்னல் வந்த புலவர்கள் ஊகத்தின் அடிப்படையில் கூட இவற்றை எழுதி இணைத்திருக்கலாம் என்று தோன்றுகிறது.

இவற்றை யெல்லாம் வரலாற்றுக் கண்ணோட்டத்துடன், இலக்கியஆராய்ச்சி அடிப்படையிலும் கண்ணுற்ற காரைக்கால் அம்மையார் புதிய உத்திகள் சிலவற்றைக் கையாண்டார். இவர் பாடியனவாகப் பதினொராம் திருமுறையில் உள்ளவை மூன்று. 1) திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள். 2) திரு விரட்டை மணிமாலை. 3) அற்புதத் திருவந்தாதி என்பன அவை.

இப்பாடல்களில் சிறப்பான உத்திகளாக இடம்பெறுவன நான்கு. அவையாவன் :- 1) தம்முடைய பெயரை எடுத்துக் கொண்ட பொருளைப் பாடிமுடித்த பின்னர், ஒருதனிப்பாடல் மூலம் பாடி இணைத்தல்.

காட்டாக,

" ஒப்பினை இல்லவன்................
அடிகளைச் செயுதலைச் காரைக்காற்பேய்
செப்பிய செந்தமிழ் பத்தும் வல்லார்
சிவகதி சேர்ந்தின்பம் எய்துவாறே "

(திருவாலங்காட்டு... 11)

என்பதனைச் சுட்டலாம்.

2) காப்பியாற்றுக் காப்பியனர் பாடிய அந்தாதிப் பாடல் எண்ணிக்கை பத்துமட்டுமே. இவரோஅற்புதத்திருவந்தாதியில் நூறு பாடல்கள் பாடி அந்தாதிக்கு நூறு என்ற புதிய வரையறையை ஏற்படுத்தியுள்ளார்.

3) மூன்றுவதாகத் தம்பாடல்களைப்பாடுவதால் உண்டாகும் பயன்கள் இவையென்று முதன்முதல் குறிப்பவரும் இவரே.

உரையினல் இம்மாலை அந்தாதி வெண்பாக்
கரைவினல் காரைக்காற் பேய்சொல் - பரவுவார்
ஆராத அன்பினேடு அண்ணலைச் சென்று ஏத்துவார்
பேராத காதல் பிறந்து "

(அற்புதத் திருவந்தாதி 101)

என்பது இவர் வாக்கு.

4) தாம் பாடியவை செந்தமிழ்ப் பாக்கள் என்று இவர் குறிப்பிடுவது பிறிதொரு சிறப்பு, இவரது காலம் கி. பி. ஐந்தாம் நூற்றுண்டுஎன்பர் க. வெள்ளைவாரணனர்ஆகியோர். (பன்னிரு

திருமுறை வரலாறு. பக்கம் 683) அப்பொழுது தமிழகத்தை ஆட்சிசெய்தவர்கள் களப்பிரர் என்பர். சங்ககாலத்தில் கொடி கட்டிப்பரந்த தமிழுக்குக் களப்பிரர் காலமும், பல்லவர்காலமும் சோதனைக் காலங்கள் என்பது வரலாறு. தெலுங்கினை அவர்கள் தாய் மொழியாகக் கொண்டவர்கள். தவிர சமஸ்கிருத மொழிக்காக முதன்மை தந்தவர்களும் மேற்குறிப்பிட்ட களப்பிரர் மற்றும் பல்லவர்கள். இதனால் தமிழால் ஒரு பெண் சிவனைப் பாடுவது என்பது மிகவும் பாராட்டிற்குரிய செய்தி. இதனை ஒரு ஆய்வு நோக்கோடு செய்த பெருமை காரைக்கால் அம்மையாருக்கே உரியது.

திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர் மற்றும் ஆழ்வார்கள் முதலியோர் தங்கள் வழிபடுகடவுளைத் தமிழால் பாடும் ஒரு பிரக்ஞையைப் புத்துயிர் பெறச்செய்தவர் காரைக்கால் அம்மையார். இதர ஐயடிகள் காடவர்கோன் நாயனர் முதலியவர்கள் (பதினொராம் திருமுறையில் இடம்பெற்றவர்கள்) காலத்தால் இவருக்குப் பிந்தியவர்களே. திருமூலர் இவரை ஒட்டி,

"மூலன் உரைசெய்த மூவாயிரம் தமிழ்"

என்பார்.

நம்மாழ்வார்

"......குருகூர் சடகோபன் முகில் வண்ணன் அடிமேல் சொன்ன
சொன்மாலை, ஆயிரத்து இப்பத்தும் வல்லார்......"

என்கிறார்.

ஞானசம்பந்தர்

"......திருநெறியதமிழ் வல்லவர் தொல்வினை தீர்தல் எளிதாமே"

என்றல் காண்க.

## முடிவுரை :

காரைக்காலம்மையாரது சிவபக்தியும், தமிழ்ப்பற்றும் பாராட்டும் வகையில் அமைகின்றன. இவர்தம் பாடல்கள் மூத்த திருப்பதிகங்கள் எனப்படும். இத்தொடர் ஒன்றே இவர் தம் பாட்டுகள் தேவார, திருவாசகங்களுக்கு முற்பட்டவை என்பதற்குச் சான்று. திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர் ஆகியோர் சிவன் உறையும் திருத்தலங்களுக்குச் சென்று முன்னர் அங்கெல்லாம் காரைக்கால் அம்மையார் திருப்பதிகங்கள் பாடப்பட்டிருக்கலாம் என்று ஊகிக்க இடமுள்ளது.

# அருட் செல்வம்

திரு. சொ. சிவதாணு
வடசேரி.

மனிதன் சிறப்பாக வாழத் தேவைப்படுவது செல்வம். அதற்கும் மேல்போவதற்குத் தேவைப்படுவது அருள். செல்வம் பொருட்செல்வம், அருட்செல்வம் என்று இரண்டு. கல்விச் செல்வம், செவிச் செல்வம் என்று இன்னும் மற்றிரண்டு செல்வங்கள் உண்டு. இவற்றைப்பற்றி வள்ளுவரும் சொல்கின்றார்.

" கற்றுங் கறிந்தடங்கித் தீதொரீஇ நன்றாற்றிப்
பெற்றது கொண்டு மனந்திருத்திப் — பற்றுவதே
பற்றுவதே பற்றிப் பணியறநின் றொன்றுணர்ந்து
நிற்பாரே நீணெறிச்சென் றார் "

என்று குமரகுருபரர் சொல்வதால் அருட்செல்வத்திற்கு கல்விச் செல்வம் அடிப்படை என்றாகிவிட்டது. எனவே தான்

" கல்வி யுடைமை பொருளுடைமை யென்றிரண்டு
செல்வமுஞ் செல்வ மெனப்படும் — இல்லார்
குறையிரந்து தம்முன்னர் நிற்பபோல் தாமுந்
தலைவணங்கித் தாழப் பெறின் "

என்று அடக்கத்தோடு வாழும் வாழ்க்கையைப் பேசும் போது கல்விச் செல்வத்தையும் பொருட் செல்வத்தையும் செல்வம் என்கின்றார் குமரகுருபரர். கல்விச் செல்வத்தின் பயன் அருட் செல்வம் பெறுவது தான். ஆகவே அருட்செல்வம், பொருட் செல்வம் என்று இரண்டும் தான் வகைபாடு. செவிச்செல்வமும் கல்விச் செல்வத்தோடும் அருட்செல்வத்தோடும் பின்னிப் பிணைந்தது தான். செல்வத்துள் செல்வம் என்று அருட் செல்வத்தையும் செவிச்செல்வத்தையும் வள்ளுவர் குறிப்பிட்டார். ஆயினும்அருட்செல்வத்தைப்பொருட்செல்வத்தோடு மட்டுமே வைத்து வேறு பிரித்துக் காட்டுவார்.

" அருட்செல்வம் செல்வத்துள் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணும் உள "

என்பதே குறள். ஆகவே எந்த செல்வத்தையும் மனிதன் பெற்றாலும் அருட் செல்வத்தை நோக்க அவையெல்லாம்

அத்தனை சிறப்பு வாய்ந்ததாக முடியாது என்பதுவே வள்ளுவர் முடிவு. எந்த ஒரு செல்வமும் அல்லது எல்லாச் செல்வமும் ஆண்டவன் அருள் ஒன்றில்லையானல் வாய்க்காது என்பதை மறந்து விடக்கூடாது.

" உள்ளது ஒழிய ஒருவர்க்கு ஒருவர் சுகம்
கொள்ளக் கிடையாது குவலயத்தில் வெள்ள
கடலோடி மீண்டு கரையேறி ஞலென்?
உடலோடு வாழும் உயிர்க்கு "

என்ற பாடல் மூலம் ஒருவனுக்குக் கடல் போலச் செல்வம் இருந்தாலும் அவனுக்கென்று கிடைப்பது மட்டும் தான் கிடைக்கும் என்பதையும் பொருட்செல்வமானலும் அருட் செல்வமானலும் இதில் எந்த மாற்றமுமில்லை என்றும் தெரிந்து கொள்ளுகின்றேம். எவ்வளவு பொருள் ஒருவன் பெற வேண்டுமோ அதைஅவன் பெற்றே தீர்வான் என்றவிதியுண்டு என்பதை உணர்த்தவே வள்ளுவப் பெருந்தகையும்,

" பரியினும் ஆகாவாம் பாலல்ல உய்த்துச்
சொரியினும் போகா தம "

என்று குறள் செய்தார். ஆகவே எல்லாம் விதிப்படி தான் நடக்கும். ஆனலும் விதியை அப்படியே நம்பி மட்டும் வாழ்த லாகாது. தனி மனிதனின் முயற்சி அவனுக்கு வழங்கப்பட்ட மதியாற்றலின் மூலம் வெளிப்பட்டுக் கொண்டு தானிருக்க வேண்டும். இது ஒரு பொது விதி என்பதை மறக்கக் கூடாது. 'முயற்சி திருவினை யாக்கும்' என்பது பொய்யல்ல.

" தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன்
மெய் வருத்தக் கூலிதரும் "

என்றே வள்ளுவர் சொல்லுகின்ருர். ஆகவே தான் திருவேறு; தெள்ளியராதல் வேறு என்று சொல்லி இருவேறு உலகத்து இயற்கையை எடுத்துக்காட்டினர். 'திரு' என்பது பொருட் செல்வம், தெள்ளியது அருட்செல்வம். இரண்டையும் முயன்று பெறலாம் என்பதுவே அடிப்படை. இந்த அடிப்படையோடு வாழ்க்கை அமையவேண்டும். உடலுக்குப் பொருட்செல்வமும் ஆன்மாவிற்கு அருட்செல்வமும் வேண்டும். " மோகமன்னம் விஸிந்ததே அபரசேதா " என்று வேதம் சொல்கின்றது. 'செல்வந்தன் ஒருவனுடைய செல்வம், சமூகத்தின் உபகாரத் துக்குப் பயன்படவில்லையென்ருல் மேலும் பகவானுடைய

கைங்கர்யத்துக்கு உபயோகப் படவில்லையென்றால் அவனுக்கு சைதன்யம் இருந்தும் இல்லாமல் போகின்றான்' என்பதே இதன் உள்ளடங்கிய பொருள். இதைத் தெரிந்து கொண்டு வாழ்வது தான் விவேகம். அந்த விவேகம் உடையவர்களே தெள்ளியர். இவர்களுக்கே அருட்செல்வம் வந்து சேரும்.

" அவரவர் வினைவழி அவரவர் வந்தனர்
அவரவர் வினைவழி அவரவர் அநுபவம்
எவெரெவர்க் குதவினர் எவெரெவர்க் குதவிலர்
தவரவர் நினைவது தமை உணர்வதுவே "

என்பதற்கேற்ப ஒவ்வொருவரும் தெள்ளியராக வேண்டியே இந்த வாழ்க்கை. எனவே தெள்ளியராயிருத்தலே செல்வந்த ராயிருப்பதினும் மேலானது. ஆகவேதான் அதுவேறு, இது தனி என்று சொல்லப்படுகிறவகையில் இரு வேறு உலகத்தின் இயற்கையை வள்ளுவர் மிக அழகாகச் சொல்லியிருக்கின்றார். ஏனென்றால் தெள்ளியவர்தான்,

" பிறப்பென்னும் பேதமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்பது அறிவு "

என்னும் குறள் வழி நிற்பவர். அவர் நாட்டமும் தேட்டமுமே அருட்செல்வம் ஒன்றுதான்.

" வேண்டத்தக்கது அறிவோய்நீ வேண்ட முழுதும் தருவோய்நீ
வேண்டும் அயன்மாற் கரியோய்நீ, வேண்டி என்னைப்பணி
கொண்டாய் வேண்டி நீ, யாதருள் செய்தாய் யானும் அதுவே
வேண்டின் அல்லால் வேண்டும் பரிசொன்றென்று
உண்டெனின் அதுவும் உந்தன் விருப்பன்றே "

என்றே வாதவூரடிகள் பாடிச் சென்றுள்ளார். ஆண்டவனின் அருள் உண்டானால் எல்லாப் பொருளும் உண்டு. எல்லாக் காரியங்களும் கைகூடி வரும். இறைவனுடைய அருட்சக்தி இறைவி. அந்த இறைவியையும் வணங்கினால் எல்லாம் கிடைக்கும். 'எனக்குப் பொருந்தாத பொருளில்லை' என்று அபிராமி அந்தாதியில் அபிராமிப் பட்டரும் 'ஏதாம் புவியில் பெறலரிதாவது எனக்கு இனியே' என்று சரசுவதி அந்தாதியில் கம்பரும் சொல்லியிருக்கின்றார்.

" வருந்தா வகை என்மனத் தாமரையினில் வந்து புகுந்து
இருந்தாள் பழைய இருப்பிடமாக; இனி எனக்குப்
பொருந்தாதொரு பொருளில்லை; விண்மேவும் புலவருக்கு
விருந்தாக வேலை மருந்தானதை நல்கும் மெல்லியலே "

என்பது பட்டர் பாடல்.

" பாதாம் புயத்தில் பணிவார் தமக்குப் பலகலையும்
வேதாந்த முத்தியும் தந்தருள் பாரதி வெள்ளிதழ்ப்பூஞ்
சீதாம்புயத்தில் இருப்பாள், இருப்ப என் சிந்தையுள்ளே
ஏதாம் புவியில் பெறலரிதாவது எனக்கு இனியே "

என்பது கம்பநாடன் பாடல். கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை திருமகளைப்பாடும்போது,

" சித்தம் தெளிந்திடும்; செய்வினை யாவும் திருத்தமுறும்
நித்தம் மறிந்தெழு செல்வமும் தங்கி நிலைபெறும்; நல்
முத்தர்க்குரிய பெரும்பதம் வாய்க்கும்; இம் முதுலகில்
பக்தர்க் கருளுந் திருமகள் பாதம் பணிபவர்க்கே "

என்றே பாடுவார்.

" சொல்லும் பொருளும் என நடமாடும் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடியே நின் புதுமலர்த்தாள்
அல்லும் பகலும் தொழும் அவர்க்கே அழியா அரசும்
செல்லும் தவநெறியும் சிவலோகமும் சித்திக்குமே "

என்றும்,

" விரவும் புதுமலர் இட்டு, நின்பாத விரைக்கமலம்
இரவும் பகலும் இறைஞ்ச வல்லார் இமையோர் எவரும்
பரவும் பதமும், அயிராவதமும், பகீரதியும்
உரவும் குலிசமும், கற்பகக்காவும் உடையவரே "

என்றும் அபிராமி அந்தாதியில் வருகின்றது. இதுவே அருட் செல்வம். அனைத்தையும் கடந்து நிற்கும் பராசக்தியாகவே அன்னை உள்ளாள். சகுணப்ரம்மாக அவள் வரும்போது அருட்கடலாகவே மாறி விடுகிறாள். அவளை என்றும் அழி வில்லாத குணக்குன்று என்றே பட்டர் வருணிக்கின்றார்.

(தொடரும்)

# ஸ்ரீ லிங்கோத்பவ மூர்த்தி

வித்துவான் திரு. வி. சா. குருசாமிதேசிகர், எம். ஏ.,

தேவம் கர்பக்ருஹஸ்ய மாநகலிதே லிங்கே ஜடாசேகரம்
கட்யாஸக்தகரம் பரைஸ்ச தததம் க்ருஷ்ணம் ம்ருகம் சாபயம்
ஸவ்யே டங்கமமேய பாதமகுடே ப்ரஹ்மாச்யுதாப்யாம் யுதம்
ஹ்யூர்த்வா தஸ்திதஹம்ஸகோலமமலம்லிங்கோத்பவம்பாவயே.

பொழிப்புரை :

ஜடாமகுடத்தை உடையவரும் இடுப்பில் வைத்துக் கொண்டிருக்கிற கையை உடையவரும், அபயம், மான், மழு முதலியவைகளை மற்றைய திருக்கரங்களால் தாங்கியுள்ளவரும், பிரும்மா விஷ்ணுக்களாலே காண முடியாத திருமுடி திருவடிகளை உடையவரும் பிரும்மா விஷ்ணுவோடு கூடியவரும் மேலே அன்னப்பறவையையும் கீழே பன்றியையும் உடையவருமான ஸ்ரீ லிங்கோத்பவ மூர்த்தியை மனதால் தியானிக்கிறேன்.

விளக்கம் :

பிரமன் படைப்புத் தொழிலினுற் செருக்குற்றுத் தன்னை விடத் தெய்வம் வேறு இல்லை எனத் தருக்கெய்தித் திருமாலிடம் சென்று அவரைப் போருக்கு அழைத்து நம்மில் வெற்றி பெற்றவரே பெரியவர் என்று இருவரும் உறுதி செய்துகொண்டு போரிட்டனர். இருவரும் செய்த போரால் உலகம் நடுங்கியது. சிவபெருமான் இனியும் வாளாவிருந்தால் உலகம் அழியும் என்று திருவுளங்கொண்டு இருவருக்குமிடையே அவர்கள் அஞ்சும்படி ஒருஅக்கினித்தம்பமாய்த் தோன்றி இத்தம்பத்தின் அடியையும், முடியையும் அறிந்தவரே பெரியவர் என்று அசரீரியாய்க்கூறியருளினுர். பிரமன்யான்முடியைக்காண்பேன் என்றும் திருமால் யான் அடியைக்காண்பேன் என்றும் தம்முள் முடிவு செய்து கொண்டனர். பிரமன் அன்னவடிவம் கொண்டு வானில் பறந்து சென்றுர். திருமால் பன்றி உருவமெடுத்து நிலத்தை அகழ்ந்து பாதாளம் சென்றுர். திருமால் பலகாலம் முயன்றும் அப்பிழம்பின் அடியைக் காணுது திகைத்து இளைத்துப் பின் நல்லுணர்வுபெற்றுச் சிவபெருமானே இவ்வாறு தோன்றினுர் என்றுஅறிந்து வெளியில்வந்து தம்பிழைபொறுக்க வேண்டி நின்றுர். வானிடைப் பறந்து சென்ற நான்முகனும் அவ்வாறே பறந்து இளைத்து, சித்தர்கள் சிலர் சிவபிரானது அடி முடிகளை அறிதல் எளிதன்று என்று கூறக் கேட்டு மீண்டு நிலத்திடை வந்துவந்து வணங்கி நின்றுர். இருவரும் சிவபெருமானைப் பிரதட்சணம் செய்து வழிபட்டுப் பிழை பொறுக்க வேண்டினர். பெருமான் அவர்கட்குக்காட்சியளித்து இருவர் பிழைகளையும் பொறுத்து மீண்டும் அவர்கட்குப் படைத்தல், காத்தல் தொழில்களை அருளினுர் என்பது இலிங்கோத்பவ மூர்த்தம் தோன்றியருளிய வர்லாறு ஆகும்.

# செய்திகள்

## ஆயில்யத் திருநாள் ஆலய வழிபாடு

தருமை ஆதீனம் 26ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் ஜன்ம நட்சத்திரமாகிய ஆயில்யத் திருநாளில் தேவார வைப்புத் தலங்களில் சிறப்புவழிபாடுகள் நிகழ்ந்து வருகின்றன. பிரமோதூத ஆண்டு புரட்டாசி ஆயில்யநாள் ஆலயவழிபாடு 16—9—90 ஞாயிற்றுக்கிழமை ஏமப்பேரூர் குன்றியூர் ஆகிய தலங்களில் சிறப்பாக நடைபெற்றது. சுவாமி அம்பாளுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நிகழ்த்தப் பெற்றன. ஓய்வு பெற்றகல்லூரிமுதல்வர் திரு. வி. சா. குருசாமிதேசிகர் அவர்கள் சொற்பொழிவாற்றினர்கள் அன்பர்கள் வந்திருந்து வழிபட்டும் கேட்டும் பயன்பெற்றனர்.

## குருவருளும் அருளுபதேசமும்

தருமை ஆதீனத் திருமடத்தில் ஆங்கிலமாதம் முதல் ஞாயிற்றுக்கிழமைதோறும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் வழங்கியருளும் திருவிளையாடற்புராண அருளுரை 7—10—90 ஞாயிற்றுக்கிழமை காலை திருமுறைப் பாராயணத்துடன் நடைபெற்றது.

கடவுள் வாழ்த்தின் சிறப்பினையும் திருக்கோயில்களில் எழுந்தருள்விக்கப்பட்ட மூர்த்தங்கள் அனைத்திற்கும் உரிய வழிபாட்டுப் பாடல்கள் உள்ளமையையும், இறைவன் மூவகை நிலையில் உள்ள உயிர்களுக்கு உள்நின்றும் வெளிநின்றும், குருவடிவம் தாங்கியும் உணர்த்துவான் என்றும் மனங்கொள விளக்கியருளினர்கள்.

அனைத்துலக சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனத்தின் பேராசிரியர் டாக்டர் திரு. கு. சுந்தரமூர்த்தி அவர்கள் தொல்காப்பிய புணர்ச்சி விதிகளுள் ஒற்று மிகுதலும் மிகாமையும் பற்றிய சிறப்பினை விளக்கியதோடு வேணவா, நாட்பெயர், திங்கட்பெயர் முதலியவற்றின் புணர்ச்சி விதிகளையும் சிறப்பாக விளக்கினர்கள்.

ஆதீன அடியார்கள், ஆசிரியர்கள், அன்பர்கள், மாணவர்கள் மதுரை, திருச்சி, மயிலாடுதுறை அன்பர்கள் கேட்டுப் பயன்பெற்றனர். அடுத்தஅருளுபதேசம் 4—11—90 ஞாயிறன்று மாலை நடைபெறும்.

## திருமுறை வேள்வி

சிவபெருமானுக்கு மிக உகந்த திருவாதிரை நாளில் ஒன்பதாம் திருமுறை முற்றோதல் (திருமுறை வேள்வி) நிகழ்ச்சி, 13—9—90 வியாழனன்று திருவாவடுதுறை அருள்மிகு ஒப்பிலா முலையம்மை உடனுறை அருள்மிகு மாசிலாமணியீசர் திருக்கோயிலில் நிகழ்ந்தது.

இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட ஓதுவாமூர்த்திகளும் புலவர்களும் காலை 7-00 மணிக்குத் திருவாவடுதுறை ஆதீனம் பூஜை மடத்தில் பூஜா மூர்த்தியையும், திருமாளிகைத் தேவரையும், ஆதிகுருமூர்த்திகளாகிய நமச்சிவாயமூர்த்திகளையும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களையும் தரிசித்துக்கொண்டு திருக்கோயிலை வழிபட்டு ஒன்பதாம் திருமுறை முற்றோதலை காலை 8-00 மணிக்குத் தொடங்கி 10-45க்கு நிறைவு செய்தார்கள்.

11 மணியளவில் தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் திருவாவடுதுறை ஆதீனத்திற்கு எழுந்தருளினார்கள். ஆதீனத் திருமடத்தில் திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் பொன்னாடை போர்த்தி வரவேற்றார்கள். தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களும் திருவாவடுதுறைஆதீனகுருமகாசந்நிதானத்துக்குப் பொன்னாடை போர்த்தி மகிழ்ந்தார்கள். பின்னர் இருகுருமணிகளும் ஒடுக்கத்தில் கொலு வீற்றிருந்தருளினார்கள். அன்பர்கள் அனைவரும் இருகுருமூர்த்திகளையும் வணங்கி அருட்பிரசாதம் பெற்றுக் கொண்டார்கள். பின்னர் திருக்கோயில் வழிபாடு நிகழ்ந்தது. இருகுருமூர்த்திகளும் அன்பர்கள் புடைசூழத் திருக்கோயில் வழிபாடு செய்தார்கள்.

அன்றையநாள் இருகுருமூர்த்திகளும் மவுனம் மேற்கொண்டிருக்கும் குருவாரநாள் ஆதலின் அவர்களின் அருளாசியினை முன்னமே ஒலிநாடாவில் பதிவு செய்திருந்த வகையில் அவை ஒலிபரப்பாயின. இத்திருமுறை முற்றோதல் விழாவின்நினைவாக, ‘திருமந்திர முன்னுரை’ என்னும் நூலைத் திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் வெளியிட்டுத் திருக்கை வழக்கமாக அன்பர்களுக்கு வழங்கியருளினார்கள்.

பின்னர் மாலை 3-30 மணிக்குத் திருமந்திரம் முதல் மூன்று தந்திரங்கள் மட்டும் முற்றோதல் நிகழ்ந்தது.

திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் திருவுளப்பாங்கின் வண்ணம் இத்திருமுறை வேள்வியில் கலந்துகொண்ட அன்பர்களுக்குச் சிறப்பாக மூன்று வேளைகளும் உணவு வழங்கப் பெற்றது.

அன்பர்கள் மாலை 7-00 மணியளவில் திருவாவடுதுறை ஆதீனம் குருமூர்த்திகளை வழிபாடு செய்து கொண்டு தருமை திரும்பினர்கள்.

## ஸ்ரீ மகாலெட்சுமி துர்க்காதேவிக்கு நாற்பதாவது சதசண்டி வேள்வி விழா

தருமை ஆதீனம் ஸ்ரீஅஷ்டாதசபுஜ மகாலெட்சுமி துர்க்கா தேவிக்கு இவ்வாண்டும் 20—9—90 முதல் பத்துநாட்களும் நவராத்திரி விழாவை முன்னிட்டு, உலக நலம்கருதி, சதசண்டி வேள்வி விழா ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் திருவுளப்பாங்கின் வண்ணம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. ஸ்ரீதுர்க்காதேவிசந்நிதியில்மலர்களாலும்,மின்விளக்குகளாலும் அலங்கரிக்கப் பெற்றிருந்த மகாவேள்வி மண்டபத்தில் யாக கலசங்கள் வைத்து அலங்கார ஆராதனைகள் செய்வித்துச் சிறப்பான முறையில் சதசண்டி வேள்வி நிகழ்த்தப் பெற்றது. நாள்தோறும் சுவாசினீ, குமாரி, வடுபூஜைகள், சதுர்வேத பாராயணம், தேவிமாகாத்மியம்பாராயணம்,திருமுறைகள், அபிராமி அந்தாதி பாராயணம் ஸ்ரீ துர்க்கா தேவிக்கு லட்சார்ச்சனை ஸ்ரீ வித்யா சக்கரமாகிய மேருவிற்கு சகஸ்ரநாமார்ச்சனை மற்றும் விசேஷ அபிஷேக ஆராதனைகள் ஆகியன நடைபெற்றன.

28—9—90 வெள்ளியன்று பகல் சப்தசதி ஹோமமும் மகா பூர்ணுகுதியும் நிகழ வேள்வி இனிது நிறைவுற்றது. 29—9—90 சனிக்கிழமை விஜயதசமியன்று காலை ஸ்ரீ துர்க்காதேவிக்கு யாக கலசாபிஷேகமும், விசேஷ அலங்கார ஆராதனைகளும் நிகழ்வுற்றது. 20—9—90 முதல் 29—9—90 முடிய நாள்தோறும் இரவு வழிபாட்டின் போது புராணம் என்ற அங்கமாக சிவாகமப்ரவீண சிவஸ்ரீ ஏ.வி. சுவாமிநாத சிவாசாரியார் 'தேவி மாஹாத்மியம்' என்பது பற்றி விரிவுரை நிகழ்த்தினர். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் இருவேளைகளிலும் எழுந்தருளி வழிபாடாற்றி அன்பர்கட்குத் திருவருட்பிரசாதம் வழங்கியருளினர்கள்.

## ஆதீனக் கல்வி நிலையங்களின் கலைமகள் விழா

தருமை ஆதீனக் கல்வி நிலையங்களாகிய வேத சிவாகம பாடசாலை, தேவாரப் பாடசாலை, ஸ்ரீ குருஞானசம்பந்தர் தொடக்கப்பள்ளி, ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்நிலைப்பள்ளி, ஆதீனக் கலைக்கல்லூரி என்னும் இவற்றின் சார்பில் நவராத்திரி நாட்களில் கலைமகள் விழா இனிதே நிகழ்வுற்றது.

20345

நாள்தோறும் மாலை 3-15 மணியளவில் தருமை ஆதீனத் திருநெறிய தெய்வத் தமிழ் மன்றத்தில் விழா நிகழ்ச்சிகள் நடைபெற்றன. அ. வ. அ. கல்லூரிப் பேராசிரியர், டாக்டர் திரு. அ. கலியபெருமாள், எம். ஏ., பிஎச். டி., மயிலாடுதுறை வழக்கறிஞர் திரு. இரா. சிவபுண்ணியம், பி. ஏ., பி. எல்., கும்பகோணம் அ. ஆ. க. கல்லூரிப் போராசிரியர் திரு. இரா. இராமலிங்கம், எம். ஏ., மயிலாடுதுறை வழக்கறிஞர் திரு. சி. ஆர். குஞ்சிதபாதம், பி. ஏ., பி. எல்., த. ஆ. க. கல்லூரி முதல்வர், டாக்டர் திருமதி ப. நீலா, எம்.ஏ., எம்.ஃபில்.,பிஎச்.டி., த. ஆ. க. கல்லூரி விரிவுரையாளர், டாக்டர் திரு. இரா. செல்வக்கணபதி, எம். ஏ., பிஎச். டி., த. ஆ. க. கல்லூரி முன்னாள் முதல்வர், வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ., அ. வ. அ. கல்லூரிப் பேராசிரியர், டாக்டர் திரு. சொ. சிங்காரவேலன், எம். ஏ., பிஎச். டி., தருமை வேதசிவாகம பாடசாலை தலைமை ஆசிரியர், திரு. ஏ. வி. சுவாமிநாத சிவாசாரியார் ஆகியோர் தொடக்கவுரையாற்றினர். ஆதீனக் கல்வி நிலையங்களின் ஆசிரியர்களும், கலைக் கல்லூரி மாணவர்களும் விரிவுரை நிகழ்த்தினர். நாள்தோறும் ஆதீனக் கல்வி நிலைய மாணவ மாணவியரால் கலைநிகழ்ச்சிகள் நிகழ்த்தப் பெற்றன.

## ஆதீனத் திருக்கோயில்களில் நவராத்திரி விழா

நவராத்திரி விழாவை முன்னிட்டுத் தருமை ஆதீனத்திற்குச் சொந்தமான திருக்கடவூர், திருபுவனம், திருவையாறு, சீகாழி, வைத்தீசுவரன்கோயில், திருப்பனந்தாள் ஆகிய திருத்தலங்களில் தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் திருவுளப்பாங்கின்வண்ணம் உலக நலம்கருதி, ஸ்ரீஅம்பாளுக்கு அருச்சனையும் விசேஷ அபிஷேக ஆராதனைகளும் நடைபெற்றன. விழா நாட்களில் அபிராமி அந்தாதி என்றதலைப்பில் பேராசிரியர்களைக் கொண்டு சமயவிரிவுரைகள்நிகழ்த்துவிக்கப் பெற்றன.

சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானத்தில் டாக்டர் திருமதி ப. நீலா, வைத்தீசுவரன்கோயில் ஸ்ரீ வைத்தியநாத சுவாமி தேவஸ்தானத்தில் டாக்டர்திரு. இரா. செல்வக்கணபதி, திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் டாக்டர் திரு. மு. சிவச்சந்திரன், திருப்பனந்தாள் ஸ்ரீ அருண ஜடேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர், திருபுவனம் ஸ்ரீகம்பகரேசுவரசுவாமி தேவஸ் தானத்தில் திரு. சாமி. கிருட்டிணமூர்த்தி, திருவையாறு ஸ்ரீபஞ்ச நதீசுவரசுவாமி தேவஸ்தானத்தில் சிவாகமப்ரவீண திரு. ப. கணேசன் ஆகியோர் 20—9—90 வியாழன் முதல் 24—9—90 திங்கட்கிழமை முடிய தொடர் சொற்பொழிவாற்றினர்.

## ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக சுவாமிகள் குருபூஜை விழா

தருமை ஆதீனம் 4 ஆவது குருமூர்த்திகளாய் எழுந்தருளி 17 ஆம் நூற்றுண்டின் இடைக்காலத்தில் அருட்செங்கோல் ஓச்சியவர்களும் ஸ்ரீ குமரகுருபரர், ஸ்ரீ வெள்ளியம்பலவாணர் முதலியோர்க்கு ஞானஉபதேசம் அருளியவர்களும் ஆகிய ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக சுவாமிகள் குருபூஜை விழா, புரட்டாசி சுக்கிலபட்சம் ஏகாதசி கூடிய 30—9—90 ஞாயிறன்று தருமபுரம் திருமஞ்சன வீதியில் உள்ள குருமூர்த்த ஆலயத்தில் மிகச்சிறப்பாக நடைபெற்றது.

திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடம் கயிலைமாமுனிவர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமார சுவாமித்தம்பிரான் சுவாமிகள் நிறுவிய அறக்கட்டளைச் சார்பில் விசேஷ அபிஷேக ஆராதனைகளும் மாகேசுவரபூசையும் திருமுறைப் பாராயணமும் நடைபெற்றன.

நண்பகல், மாலை இருவேளைகளிலும் தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் எழுந்தருளி வழிபாடாற்றி அன்பர்கட்குப்பிரசாதம் வழங்கினர்கள். நண்பகல் மாகேசுவர பூசை நடைபெற்றது. மாலை 6-30 மணியளவில் திருமுறைப் பண்ணிசையை அடுத்துக் கருத்தரங்க நிகழ்ச்சி நடைபெற்றது. தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் ஆசியுரை வழங் கினர்கள். டாக்டர் திரு. கு. சுந்தரமூர்த்தி, பண்டார மும்மணிக் கோவை' பற்றியும், டாக்டர் திரு. மு. சிவச்சந்திரன், "சிதம்பரச் செய்யுட்கோவை" பற்றியும், புலவர் திரு. இரா. மருதநாயகம் "காசிக்கலம்பலம்" பற்றியும், புலவர் திரு கே. கணபதி, "திருவாரூர் நான்மணிமாலை" பற்றியும் உரை நிகழ்த்தினர். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் குருமூர்த்த வழிபாடு ஆற்றி அன்பர்கட்குக் குருவருட் பிரசாதம் வழங்கியருளினர்கள்,

# எதிர்காலம்

ஜோதிஷம்
திரு. A. இராசமாணிக்கம்
ஓய்வுபெற்ற ஆசிரியர்
ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.

**( பிரமோதூத ஸு ஐப்பசி மீ 1உ முதல் 30உ முடிய )**

**(18—10—1990 முதல் 16—11—1990 முடிய)**

பிரமோதூதஸு புரட்டாசி மீ 31உ புதன் வாரம் சதுஷ்பாத கரணம் கூடிய காலத்தில் சூரியன் உதயம் முதல் 41 நாழிகை 48 வினுடிக்கு மிதுன லக்கினத்தில் ஸ்ரீ லோக ரட்சகாரன சூரிய பகவான் கன்னியாராசியிலிருந்து துலா ராசி சங்கிரமணமாக ஐப்பசி மாதப்பிரவேசம் செய்தருளுகின்ருர். அன்று விஷு புண்ணிய காலம். மறுதினம் ஐப்பசி மீ முதல் தேதி லக்ஷ்மி குபேரபூஜை கேதார கௌரி விரதம், இரஸாதிபதி புதபகவான் ஆகிருர். அதனுல் எல்லாவகை தானியங்களும் விருத்தியாகும். அரசர்கள் நீதி செலுத்தி மக்களை காப்பார்கள். பசுக்கள் விருத்தியாகும். பால்பொருள்கள் அதிகரித்துவரும். பிரஜைகள் க்ஷேமமாக இருப்பார்கள். உலகெங்கும் உள்ள திருமடங்கள் ஆசாரிய பீடங்களில் பத்மாசனத்தில் நிஷ்டையில் இருந்து சிவப்பிரகாசநாதர்திகழ்கின்றஉலகம்உய்யஈசுவரனைத்தியானிக்கின்ற சிவஞானகுருமகான்கள் ஸ்ரீலஸ்ரீகுருமகாசந்நிதானங்கள், ஜெகத்குருமகான்கள் நிஷ்டையினின்றும் எழுந்தருளி லோகத்துக்கு இறைவழிபாட்டினுல் மாந்தர்களுக்கு ஏற்படுகின்ற மனம் ஒருவழிபடுதல் நற்சிந்தை நல்லஞானம் சீரிய வழிசெயலாற்றல் இவையும் தெய்வபுண்ணியங்கள் உயர்பண்புள்ள பிரஜைகள் ஆளுமையின் நீதி இவை குறித்தும், தம் திருவாய் மலர்ந்து பொன்மொழிபகர்ந்து அருளிச்செய்வார்கள். நீதிநெறிஉரைகள் சகாப்தத்தின் படியில் பொன்னேடுபதிவுற செய்தருள்வார்கள். தேசங்களில் எங்கும் தேவாலயங்களில் சிறப்போடு பூசனைகள் உற்சவங்கள் நடைபெறும். நாடுகளில் எங்கும் பக்தர்களின் குழாம்கூடி கூட்டுப் பிரார்த்தனை செய்து ஈஸ்வரனை பாடிப் பரவி பரமானந்தத்தில் ஆழ்வார்கள். நாடுகளில் நலம்பல ஏற்படும்.

1. மேஷம் :— அசுவதி – பரணி – கார்த்திகை ¼

மேஷ ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். பண வருமானம் கெடியில் தேவைக்கு ஏற்ப வரும். அக்டோபர் 20உ முதல் நல்ல வகை செலவு செய்யும். சான்ருேர் நல்லவர்கள் வருகை நல்ல சம்பவங்கள் நேரும். மனுேவேகத்துக்குரிய பிரச்சினைகள் சிலவரினும் நவம்பர் 2-ல் அவற்றிற்கு ஓர் நல்ல

தீர்வு ஏற்படும். வெளியூர் பயணம் தெய்வ தரிசனம் செய்தல் ஆகும். தாரம்புத்திரர்களின் சௌக்கியம்நன்ருக இருந்துவரும். அக்டோபர் 22, 23 தேதிகள் சந்திராஷ்டமம். வியாழன், வெள்ளி சுபம்.

2. ரிஷபம்:- கார்த்திகை ¾ - உரோகிணி - மிருகசீரிஷம் ½

ரிஷப ராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். பணவருமானம் அதிகம் தரும். அரசாங்கத்தில் நற்பலன் தரும். எழுத்துமூல விஷயங்களில் புத்திரர்களின் கல்வி கலை உத்தியோகம் இவற்றில் விசேஷ பலனை உண்டுபண்ணும். வீடு வாகனம் நவீன சாதனம் அனுபோக பிராப்தியில் நல்ல சௌகரியம் இருந்துவரும். எல்லாக்காரியங்களும் திட்டமிட்டபடி உறுதிப் பான்மையில் செய்விக்கும். காலம் தவருமை கடைபிடிக்கும். தாரம் புத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். அக்டோபர் 24, 25 தேதிகள் சந்திராஷ்டமம். ஞாயிறு, திங்கள்சுபம்.

3. மிதுனம் :- மிருகசீரிஷம் ½ - திருவாதிரை - புனர்பூசம் ¾

மிதுன ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனுக நடக்கும். பண வருமானம் அதிகம்தரும். அதற்கேற்ப செலவினமும் செய்யும். வித்துவத்துவம் கலைத்துறையில் சிறப்பு பலனை உண்டு பண்ணும். நவம்பர் 2-ல் அரசுலிகிதம் வந்து மகிழ்ச்சியளிக்கும். நெருக்கடியாக இருப்பவை குரு வீட்சணத்திஞல் நன்மையாக மாறிவரும். தாரம் புத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்து வரும். எல்லாக்காரியங்களும் தெய்வ பலனில் நல்ல விதமாக நடந்துகொண்டிருக்கும். அக்டோபர் 26, 27, 28 தேதிகள் சந்திராஷ்டமம். செவ்வாய், புதன் சுபம்.

4. கடகம் :- புனர்பூசம் ¼ - பூசம் - ஆயில்யம்.

கடக ராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். பண வருமானம் கண்ய ஸ்திதிக்கு ஏற்ப வரவாகிக்கொண்டிருக்கும். வித்துவத்துவம் கலைத்துறையில் சிறப்பளிக்கும். அரசுதொடர்பு விஷயங்களில் நல்லன ஏற்படச் செய்யும். சிவந்த வஸ்துவின் பிராப்தியளிக்கும். செந்நெல்பிராப்தி மிகுந்துவரும். அக்டோபர் 21-ல் நவீன வாகனம் தரும். எல்லாக்காரியங்களும் மனேலயப் படி நடந்துகொண்டிருக்கும். தாரம் புத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். அக்டோபர் 29, 30 தேதிகள் சந்திராஷ்டமம். வியாழன், வெள்ளி சுபம்.

5. சிம்மம் :- மகம் - பூரம் - உத்திரம் ¼

சிம்ம ராசி 9 பாதங்களும் சுபமான பலனைத் தரும். பண வருமானம் கண்ய ஸ்திதிக்கு ஏற்ப வந்து நிறையும். நல்ல

பொதுநலதர்மம் செய்யும். சுற்றம்தாழலில் நற்பெயர் ஏற்படும். ஓர் சுப விஷய செலவினையும் ஏற்கும். வித்துவத்துவம் கலைத் துறையில் நவம்பர் 2 தேதி முதல் விசேஷ பலனை ஏற்படுத்தும். ஓர் ஆபரணம் வாங்குதல் ஆகும். எல்லாக்காரியங்களும் ஜெய பிராப்தியாக நடந்தேறும். தாரம் புத்திரர்களின் நலம் நன்றாக இருந்துவரும். அக்டோபர் 31, நவம்பர் 1 தேதிகள் சந்திராஷ்டமம். சனி, ஞாயிறு சுபம்.

6. கன்னி :- உத்திரம் $\frac{3}{4}$ – ஹஸ்தம் – சித்திரை $\frac{1}{2}$

கன்னியா ராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். பண வருமானம் கணிசமாக வந்து நிறையும். வித்துவத்துவம் கலைத் துறையில் அரசாங்க நன்மை ஏற்பட்டு வரும். செய்தொழிலில் விருத்திபலன் தரும். உத்தியோகத்தில் உயர்பதவியளிக்கும். வீடு வாகன பிராப்தியில் நல்ல சௌகரியம் தரும். புத்திரருக்கு கல்வி கலை உத்தியோகத்தில் உயர்ஸ்திதியளிக்கும். தாம்பத்திய வாழ்வில் மகிழ்ச்சி தரும். நற்பாக்கியம் தரும். நவம்பர் 2, 3 தேதிகள் சந்திராஷ்டமம். திங்கள், செவ்வாய் சுபம்.

7. துலாம் :- சித்திரை $\frac{1}{2}$ – சுவாதி – விசாகம் $\frac{3}{4}$

துலாராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். பண வருமானம் நல்ல வகையில் வந்துகொண்டிருக்கும். வித்துவத் துவம் கலைத்துறையில் நற்பலன் தரும். ஒப்பந்தத்தில் நல்லன ஏற்பட்டு வரும். காலிடருதல் விபத்து ஆகுதல் சம்பவிக்கும். உடன் தப்பும். எல்லாக்காரியங்களும் மேலோர் முதியவர் களின் அனுசரணையில் மதிப்பாக நடந்துகொண்டிருக்கும். தாரம் புத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். நவம்பர் 4, 5 தேதிகள் சந்திராஷ்டமம். வியாழன், வெள்ளி சுபம்.

8. விருச்சிகம் :- விசாகம் $\frac{1}{4}$ – அனுஷம் – கேட்டை

விருச்சிக ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். பணவருமானம் வந்துகொண்டிருக்கும். சுபகாரியம் விளம்பரம் தெய்வ கைங்கர்யம் இவற்றில் கண்யத்தில் செலவினமும் செய்யும். எல்லா நெருக்கடி பிரச்சினைகளிலும் நல்லவர் பிரபலஸ்தர்களின் அனுகூலங்கள் நிம்மதி அளிக்கும். திருச்செந்திலாண்டவன் கிருபாகடாட்சம் கிட்டும். திருச் செந்தூரில் தெய்வதரிசனம் செய்யவும் தாரம் புத்திரர்களின் சௌக்கியம் சுகசௌகரியம் நன்றாக இருந்து வரும். நவம்பர் 6, 7 தேதிகள் சந்திராஷ்டமம். சனி, ஞாயிறு சுபம்.

9. தனுசு :- மூலம் – பூராடம் – உத்திரம் $\frac{1}{4}$

தனுர் ராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். பண வருமானம் மூன்று வகையில் வந்து சேரும். வித்துவத்துவம்

கலைத்துறையில் செய்தொழில் உத்தியோகத்தில் வெகுவாக நற்பலன்களை உண்டுபண்ணும். பொது நல சேவையில் முன் செய்த நன்மைகளில் புகழ்வரும். எல்லாக்காரியங்களையும் பெருந்தன்மையில் வெற்றிகரமாக நடத்தச் செய்யும். ஓர்மகவு உண்டாகும். தாம்பத்தியவாழ்வில் சொகுசு நிலவும் சுபநிகழ்ச்சி பந்துக்களின் வருகை மகிழ்ச்சி தரும். நற்சம்பவங்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கும். நவம்பர் 8, 9 தேதிகள் சந்திராஷ்டமம். திங்கள், செவ்வாய் சுபம்.

10. மகரம் :- உத்திராடம் $\frac{3}{4}$ - திருவோணம் - அவிட்டம் $\frac{1}{2}$

மகரராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். பண வருமானம் சரளமாக வந்து கொண்டிருக்கும். வித்துவத்துவம் கலைத்துறையில் சிறப்பளிக்கும். செய்தொழில் உத்தியோகத்தில் அரசாங்க நன்மைகள் ஏற்பட்டு வரும். எல்லா அலுவல்களையும் சுறு சுறுப்புடன் நடத்தச் செய்யும். வீடுவாகனங்களில் புதியன அல்லது நாகரிகம் பொருந்தியது அனுபோக பிராப்தியாகும். நல்லவர் பிரபலஸ்தர்நேசம் தரும். தாரம்புத்திரர்களின் நலம் நன்றாக இருந்து வரும். நவம்பர் 10, 11, 12 தேதிகள் சந்திராஷ்டமம். வியாழன், வெள்ளி சுபம்.

11. கும்பம் :- அவிட்டம் $\frac{1}{2}$ - சதயம் - பூரட்டாதி $\frac{3}{4}$

கும்பராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். பண வருமானம் வரும். வித்துவத்துவம் கலைத்துறையில் எழுத்துமூல விஷயங்களில் நல்லன ஏற்படச் செய்யும். நூதன இயந்திர சாதனம் கையாளுதல் ஆகும். நவம்பர் 2 தேதியளவில் புதிய தொழில் துவங்குதல் உத்தியோக வாய்ப்பு ஏற்படுதல் ஆகும். நெருங்கிய தொடர்பில் அன்யோன்யமாக இருந்தவர் ஒருவர் காரணமின்றிவிலகிக்கொள்வர். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். அக்டோபர் 18 நவம்பர் 13, 14 தேதிகள் சந்திராஷ்டமம். வெள்ளி, சனி சுபம்.

12. மீனம் :- பூரட்டாதி $\frac{1}{4}$ - உத்திரட்டாதி - ரேவதி

மீன ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். பண வருமானம் அதிகம் தரும். வித்துவத்துவம் கலைத்துறையில் எழுத்துமூலவிஷயங்களில் நல்லனஏற்பட்டுக்கொண்டிருக்கும். சிவந்த பொருள் பிராப்தியளிக்கும். செந்நெல்லில் விருத்தி ஏற்படும். மனோபலத்தில் திருச்செந்திலாண்டவர் பக்தியில் எல்லாக்காரியங்களும் செவ்வையாக நடத்து வரும். நல்லவர் பிரபலஸ்தர் சந்திப்பு நல்விஷய உரையாடல் மகிழ்ச்சியாகும். தாம்பத்தியவாழ்வில்சௌகரியங்கள்இருந்துவரும். அக்டோபர் 19, 20, நவம்பர் 15, 16, தேதிகள் சந்திராஷ்டமம். ஞாயிறு, திங்கள் சுபம்.

# ஐப்பசி மாதச் சிறப்பு நாட்கள்

18--10—90 வியாழன், சர்வ அமாவாசை, வைசிரா கேதார கௌரீ விரதம், லட்சுமிகுபேரபூஜை, மயிலாடுதுறை-வள்ளலார் கோயில் ஸ்ரீ மேதா தக்ஷிணாமூர்த்தி கங்காதேவியுடன் காவிரியில் தீர்த்தம் கொடுத்தருளல்.

19—10 90 வெள்ளி, கோவர்த்தன பூசை, விக்ரம சகம் 20-47. வேளூர், மயிலாடுதுறை – குமரக்கட்டளை, சீகாழி, திருச்செந்தூர், பழனி முதலிய தலங்களில் ஸ்கந்த சஷ்டி உற்சவ ஆரம்பம்.

21—10—90 ஞாயிறு, பூசலார் நாயனார் குருபூஜை.

22—10—90 திங்கள், சதுர்த்தி விரதம், நாகசதுர்த்தி.

24—10 - 90 புதன், கந்தசஷ்டி விரதம், சூரசம்காரம். ஐயடிகள் காடவர்கோன் குருபூஜை.

25—10 - 90 வியாழன், கந்தசஷ்டி உற்சவ தீர்த்தம்.

28 – 10—90 ஞாயிறு, வேளூர் ஸ்ரீ வள்ளிதேவசேனா சமேத ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி திருவீதியுலா.

2—11—90 வெள்ளி, பௌர்ணமி விரத பூசையில் அன்னாபிஷேகம். இந்திரஸாவர்ணிகமனு. திருமூல நாயனார் குருபூஜை.

3—11—90 சனி, நெடுமாற நாயனார் குருபூஜை.

4—11—90 ஞாயிறு, கிருத்திகை விரதம், தருமை ஸ்ரீ சண்முகர் அபிஷேகம். வேளூர் கிருத்திகை. இடங்கழி நாயனார் குருபூஜை.

5—11—90 திங்கள், சங்கடஹர சதுர்த்தி.

8—11—90 வியாழன், கமலை ஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள் குருபூஜை. சத்தி நாயனார் குருபூஜை.

9—11—90 வெள்ளி, காளாஷ்டமி. தருமை 25 ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் குருபூஜை.

10—11—90 சனி, ஆயில்ய விழா.

12—11 90 திங்கள், ஐப்பசி பூரம், திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஞானபீடம் அமர்ந்த நாள். வைசிரா.

14—11 90 புதன், பிரதோஷம்.

15—11—90 வியாழன், மெய்கண்டதேவர் குருபூஜை.

16—11—90 வெள்ளி, கடைமுகம். திருவையாறு மாதப் பிறப்பு தீர்த்தம், விருச்சிகரவி 35 – 55. விஷ்ணுபதி. சர்வ அமாவாசை.

GNANASAMBANDAM Regd. No. ... / ...
வெளியீடு Regd. No. TN / MM. 4

உ

தருமை ஆதீனம்

ஞானசம்பந்தம் பதிப்பகம் வெளியீடுகள்

## விலைப் பட்டியல்

| | | |
|---|---|---|
| 1. | சிவப்பிரகாசம் | ரூ. 1—30 |
| 2. | நெஞ்சுவிடுதூது | 0—55 |
| 3. | சைவசித்தாந்தம் | 0—55 |
| 4. | திருக்களிற்றுப்படியார் | 0—65 |
| 5. | மெய்கண்ட நூல்கள் அறிமுகம் | 1—00 |
| 6. | சைவசித்தாந்தக் கட்டளை | 0—60 |
| 7. | போற்றிபஃறொடை வினாவெண்பா | 1—00 |
| 8. | இருபா இருபஃது | 1—10 |
| 9. | திருஉந்தியாரும் கொடிக்கவியும் | 0—75 |
| 10. | அறுவகைச்சமயம்சைவசிந்தாந்தம்ஒப்பீடு | 12—00 |
| 11. | அறுவகைச்சமயம் சமயதத்துவ ஒப்பீட்டுப் பாடநூல் | 2—50 |
| 12. | மெய்கண்டசாத்திரம் (காலிகோபைண்ட்) | 25—00 |
| 13. | மெய்கண்டசாத்திரம் (ராப்பர் பைண்ட்) | 20—00 |
| 14. | சங்கற்பநிராகரணம் (ஆங்கிலம்) | 3—50 |
| 15. | தமிழ் வளர்க்கும் தருமபுரம் | 5—00 |
| 16. | சிவாலய அமைப்பும் மகாகும்பாபிஷேகத் தத்துவமும் | 0—90 |
| 17. | விநாயகர் வரலாறும் தோத்திரங்களும் | 0—90 |
| 18. | அறுவகைச் சமயம் | —50 |
| 19. | ஆதனூர்தலச்சிறப்பும் நந்தனார்வரலாறும் | 0—90 |
| 20. | குருஞானசம்பந்தர் (ஆங்கிலம்) | 5—00 |

(அஞ்சல் செலவு தனி)

கிடைக்குமிடம் ;—

செயலாளர்,
ஞானசம்பந்தம் பதிப்பகம்,
தருமை ஆதீனம்,
தருமபுரம் – மயிலாடுதுறை 609 001.

Printed & Published by V. Ramaiah Pillai, Manager, Dharmapuram, at the Gnanasambandam Press, Dharmapuram, Mayiladuthurai. 10-10-90